Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

கடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 27 புதன்கிழமை (11-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:227

### நேற்று நள்ளிரவு ஜனாதிபதி திடீர் அறிவிப்பு

# நாடாளுமன்று 2 மாதங்கள் ஒத்திவைப்பு

# ஒகஸ்ட் 21 இல் சர்வஜன வாக்கெடுப்பு

## புதிய அரசமைப்பு குறித்து

கொழும்பு,ஜூலை11

நேற்று நள்ளிரவு முதல் செப்ரெம்பர் 7 ஆம் திகதி வரை - சுமார் இரண்டு மாத காலத்துக்கு - நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பதான வர்த்தமானி அறிவிப்பை நேற்று நள்ளிரவு 12 மணியளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்தார்.

மூன்று விடயங்களை முன்வைத்து ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஒரு சர்வஜன வாக்கெடுப்பை தாம் நடத்தப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல், புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குதல், புதிய தேர்தல் முறைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய மூன்று உத்தேசத் திட்டங்களுக்கு மக்களின் அனுமதியைக் கோரும் விதத்திலேயே இந்த சர்வஜன வாக்கெடுப்பைத் தாம் நடத்தப் போவதாக அவர் தெரிவித்தார்.

"இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவே மக்கள் எனக்கு ஆணை தந்துவிட்டார்கள். ஆனால் தவறான தேர்தல் முறைகளால் இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. எனவே புதிய மாற்றங்கள் அவசியமாகின்றன" - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-3)

# பல்கலை மூடப்பட்டதை அடுத்து

# யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலை!

## பாடசாலைகளுக்கு அருகில் பொலீஸ் பாதுகாப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

**யாழ்.பல்கலைக்கழகம் மூடப்படுவதற்கான உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதை அடுத்து யாழ்ப்பாணத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.**

**பல்கலைக்கழக நெருக்கடி பாடசாலைகளுக்கும் பரவலாம் என்ற அச்சம் காரணமாக குடாநாட்டின் பிரபல பாடசாலைகளுக்கு அருகில் பாடசாலை வேளையில் பொலீஸார் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.**

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தும் அவரை விடுவிக்கக் கோரியும் பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி வருவதும் -

இதனையடுத்து, உயர்கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சர் இந்திக குணவர்த்தனாவின் பணிப்பின்பேரில், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் வழங்கிய உத்தரவை அடுத்து, யாழ்.பல்கலைக்கழகம் நேற்று முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்படுவதாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அறிவித்ததும் - தெரிந்தவையே.

இந்த அறிவித்தலுக்கு அமைய நேற்று பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பல்கலைக்கழகச் சுற்றாடல் எங்கும் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக பின்பகுதி வீதிகளில் கடமையிலிருந்த பொலீஸார் அந்த வீதிகள் ஊடாகப் பல்கலைக்கழக மாணவர்கள் செல்வதற்கு நேற்று அனுமதிக்கவில்லை.

வளாகச் சுற்றாடலில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த நெருக்கடி பாடசாலைகளுக்கும் பரவலாம் என்ற அச்சம் காரணமாக யாழ்ப்பாணத்தில் பெற்றோர்கள மத்தியில் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

தமது போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பகிரங்க அறிக்கை மூலம் கோரியிருப்பதால் இன்று அல்லது அடுத்து வரும் நாள்களில் நெருக்கடி தீவிரமடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**திவ்வியன் கைது தொடர்பான**

- ★ பல்கலை மாணவர் ஒன்றியத்தின் அழைப்பு
- ★ ஈ.பி.டி.பி. கட்சியின் அதிர்ச்சி
- ★ ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ், கூட்டணி கண்டனம்
- ★ மனிதநேய அமைப்புகள், நீதி சமாதான அமைப்பு ஆகியவற்றின் அறிக்கை
- ★ பல்கலை ஊழியர் கோரிக்கை

*அனைத்தும் உள்ளே!*

## திவ்வியனை விடுவிக்காததால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே முழுப்பொறுப்பு!

### 11 தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை11

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை உடனடியாக அரசு விடுதலை செய்யவேண்டும். அவ்வாறு விடுதலை செய்யாவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை பதினொரு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு நிறைவேற்றியுள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற இந்தக் கூட்டமைப்பின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. மாணவன திவ்வியனின் கைது மற்றும் அதை ஒட்டிய விவகாரங்கள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவது என்றும் -

திவ்வியனின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி, கல்வி உயர்கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் அனுப்புவது என்றும் - அங்கு முடிவுகள் எடுக்கப்பட்டன. (உ-3)

## பாலியல் வன்செயல்களை கண்காணிக்க குழு அமைக்குக!

### ஐ.நாவிடம் தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு,ஜூலை11

அல்லாரையில் தமிழ்ப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாககப்பட்டுள்ள சம்பவத்தைக் கண்டித்துள்ள பதினொரு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு -

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்செயல்களைக் கண்காணிக்க குழு ஒன்றை இலங்கையில் அமைக்க வேண்டும் என்று ஐ.நாவைக் கோரவிருக்கின்றது.

நேற்று நடந்த கூட்டமைப்பின் கலந்துரையாடலில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா.சபை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்வது என்றும் - முடிவு செய்யப்பட்டது.

## விடுதலையான 22 தமிழக மீனவரும் இந்தியப் படையினரிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 50 இந்திய மீனவர்களில் 22 மீனவர்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைக்கான அனுமதி பெற்ற மீனவர்களில் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாராயணன் றொவிந்தன் (வயது 36) என்பவர் சிறுநீரக கல்லடைப்பு நோயால் பாதிக்கப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவர் நேற்று அனுப்பப்படவில்லை.

கருணை அடிப்படையில் நீதிவானால் விடுவிக்கப்பட்ட 12 வயது சிறுவன் உட்பட விடுதலையான 22 பேரையும் காங்கேசன்துறைக் கடல பகுதியில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் நேற்றுமாலை ஒப்படைக்க ஏற்பாடாகி இருந்தது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ். சமூகத்தை அணி திரளும்படி அழைக்கின்றனர் பல்கலை மாணவர்

யாழ்ப்பாணம்,ஜூலை11

பல்கலைக்கழகம் இன்று எடுத்திருக்கும் முடிவுக்குச் சார்பாக யாழ்ப்பாண சமூகம் அணி திரள வேண்டும்.

- இப்படி அறைகூவல் விடுத்திருக்கின்றது யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர் ஒன்றியம்.

மாணவன் திவ்வியன் கைது செயயப்பட்டதை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்து விளக்கி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட இறுதிவருட மாணவனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் கடந்த 2 ஆம் திகதி திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்தும் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள்

ஓர் அப்பாவி மாணவன் மாணவர் சமூகத்திற்காகவும் எமது நாட்டில் துன்பப்படும் மக்களுக்குச் சார்பாகவும் ஜனநாயக ரீதியில் பல்கலைக்கழகத்தில் இருந்து செயற்பட்டு அதற்காக இன்று இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றான். பேரினவாதிகளால் வித்திட்டு வளர்க்கப்பட்டு இன்று பூதாகாரம் எடுத்து நிற்கின்ற போரினால் திட்டமிட்ட முறையில் தன்னின மக்கள் அழிக்கப்படும் பொழுது - சின்னாபின்னப்படுத்தப்படும் பொழுது - அதனைக் கண்டு மௌனமாக சுயவாழ்வுடன் முடங்கிப் போகும் தன்மான உணர்வு இல்லாத மாணவர்கள் அல்லர் நாம். இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், தன்மானமும் தனித்துவமும்மிக்க ஓர் இனத்தினைப் பூண்டோடு சாய்க்க மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் சாத்வீகமான முறையில் போராடி வந்திருக்கின்றனர். இவ்வாறாக மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க எண்ணுகின்ற அனைவரும் புலிச்சாயம் பூசப்பட்டு, கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்; சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்; படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்; அத்தோடு இன்னும் பலர் சிறைகளில் இரத்தக்கண்ணீர் வடித்து வருகின்றார்கள். இத்தகைய கசப்பான அனுபவங்கள் எமது கடந்த காலத்தில் அதிகமாகக் காணப்பட்டிருந்தாலும் பல்கலைக்கழக சமூகம் இன்று எடுத்திருக்கின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்குக் காரணம் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் எமது அன்பிற்குரிய மக்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.

### சுதந்திரமான அந்தக் காலம்

குடாநாடு அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத காலம் - அரசின் கொடிய பொருளாதாரத் தடைகள் மூலமும் இரக்கமற்ற யுத்த நடவடிக்கைகளாலும் தமிழ்மக்கள் சீரழிந்த ஒரு வாழ்வினைத் தமது நாளாந்தப் பொழுதுகளாகச் சுமந்துநின்ற அந்தகாலம்; ஆனால் எமது உயிருக்கும் தன்மானத்திற்கும் எமது பெண் உறவுகளின் கௌரவத்திற்கும் சுதந்திரத்திற்கும் குறைவில்லாத அந்தக் காலம். சுருக்கமாகக் கூறின் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த அந்தக் காலம். இக்காலத்தில்தான் அரசின் ஆக்கிரமிப்புப் பார்வை குடாநாட்டின் மீது திரும்பியது. அரசின் இயல்பான அரக்கத்தனத்தால் புண்பட்டுப்போயிருந்த மக்களுக்கு மேல் மீண்டுமொரு பேரிடியாக குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டது. நாட்டில் மக்கள் ஒரு நேரம் உண்ண உணவின்றித் தவித்திருந்த போது ஸ்ரீலங்கா அரசு பல ஆயிரம் கோடி ரூபா செலவில் மக்களின் வாழ்விடங்கள மீது குண்டுமழை பொழிந்து யுத்தத்தை முன்னெடுத்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு நிம்மதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான யுத்தம் என்ற போர்வையில் பெரும் அரக்கத் தனம் யாழ்.மண்ணில் அரங்கேற்றப்பட்டது. யுத்த நடவடிக்கைகளினால் அநாதைகளாகப் புலம் பெயர்த்தப்பட்ட மக்கள் அரசின் பசப்பு வார்த்தைகளுக்கு நம்பிக் கவரப்பட்டு பகை வாழும் கூட்டில் மீண்டும் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உண்மையே இதுவரைகாலமும் கொடூரப்படுத்திய ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒரு சாரார் யாழில் குடியேறிய பின்னர் தெருக்களிலும் திண்ணைகளிலும், போக்கிலும் வரவிலுமாக 600க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் அப்பாவி உயர்கள் துடிக்கத்துடிக்க சித்திரவரை செய்யப்பட்டு உயிருடனும் உயிரின்றியும் செம்மணிப் புதைகுழி எங்கும் நிரப்பப்பட்டன. ஏதுமறியாத அப்பாவி இளம் பெண்கள் ஆயுதமேந்திய காமப் பேய்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுக் குதறப்பட்டனர். அன்று கிருஷாந்தி குமாரசாமியில் இருந்து மீண்டும் தொடங்கிய வல்லுறவு, இன்று அல்லாரையில் நடந்தேறிய கொடூரம் வரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. வயதுவேறுபாடு இன்றிக் கைது செய்யப்பட்டபின் கொடூரப்படுத்தப்பட்டு காற்றோடு காற்றாகிவிட்ட சோகக் கதைகள் பல ஆயிரம்.

### பேரினவாதிகளின் எதிர்பார்ப்பு

எமது இனம் அரச அரக்கத்தனத்தின் அழிப்பிற்கு உட்படுத்தப்படும் பொழுது எந்த ஒரு தன்மானமுள்ள, மனித நேயமுள்ள தமிழனாலும் பொறுத்துக்கொள்ள முடியாது. இங்கு ஒரு பல்கலைக்கழகத்தின் பொறுப்புள்ள மாணவர்கள் தம் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரக்கத்தனத்தினைக் கண்டும் காணாதது போல் இருக்க வேண்டும் என்பதே பேரினவாதிகளின் எதிர்பார்ப்பு. இத்தகைய எதிர்பார்ப்புக்களிற்கு மாறாக சமூகப் பொறுப்புடன் செயற்பட்ட மாணவர்களின் மனித நேயச் செயற்பாடுகளை ஆயுதமுனையில் நசுக்கும் செயற்பாடுகளாகவே கொலை அச்சுறுத்தல்கள் விட்டு, புலிகள் என முத்திரை குத்திக் கைது செய்து சித்திரவதைக்குட்படுத்தி குடாநாட்டை ஓர் இருண்ட சிறைச்சாலையாகவே வைத்திருக்க ஸ்ரீலங்கா அரசு விரும்புகின்றது. இவ்வாறன இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழகம் குரல் கொடுத்து வருகின்றது. அவ்வாறான விடயங்களில் ஈடுபட்ட மேலும் பல மாணவர்கள் இதற்கு முன்பும் எச்சரிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதும் கைதுசெய்யப்பட்டதும் சில மாணவர்கள் குடாநாட்டின் வெளியே செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் பலரும் அறிந்ததே.

### திவ்வியனின் சேவை

தற்போது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன திவ்வியன் படையினராலும் ஸ்ரீலங்கா அரசினாலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கைதுகள், கொலைகள், சித்திரவதைகள், தாக்குதல்கள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் போன்றவற்றை அஞ்சாது அப்பட்டமாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்துகின்ற பல்கலைக்கழகத்தின் பணியிலேயே முக்கிய பங்கு வகித்தவர். பளைப் பகுதியிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் மாணவர் போராட்டத்திலும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து அரசினால் சுட்டுக்கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு எதிரான செயற்பாட்டிலும், பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைக்கு எதிரான செயற்பாடுகளிலும், யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் படுகொலைக்கு எதிராகவும் பிந்துனுவெவ முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராகவும் பல்கலைக்கழகம் மேற்கொண்ட எதிர்ப்புச் செயற்பாடுகளில் மாணவர் ஒன்றியத்தின் சார்பாக முன்நின்று செயற்பட்டவர்.

திவ்வியன் எமது மக்களின் நலனுக்காகக் குரல் கொடுத்து வந்த காலப்பகுதியில் அதிருப்தியும் கடும் விசனமும் அடைந்த அரச படையினர் பல தடவைகள் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்ததுடன் கொலை செய்யவும் முயற்சித்திருந்தனர். தனது சொந்த வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இரண்டு தடவைகள் இராணுவத்தின் பிஸ்டல் குழுவினரால் படுகொலை செய்ய எத்தணிக்கப்பட்டதாகத் தனக்கு நம்பிக்கையான பத்திரிகை நிருபர்களுக்கு அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார் எனத் தற்போது அறியமுடிகிறது. திவ்வியனை கொலை செய்ய அல்லது கைது செய்ய நன்கு திட்டமிட்டுப் பின் தொடர்ந்துகொண்டிருந்த அரச படை ஆள்களால் இம்மாதம் 2 ஆம் திகதி மாலை அவர் தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இணுவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவ்விடத்திலேயே மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டு பின் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தமது கைது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காகவும் எமது யாழ்.பல்கலைக்கழக சமூகம் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கொச்சைப்படுத்துவதற்காகவும் அவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகச் செய்தி ஊடகங்களுக்கு ஊடாகப் பிரசாரப்படுத்தி வருகின்றது படைத்தரப்பு.

### கட்டளைத் தளபதி கூறியவை

நேற்றைய தினம் (09-07-2001) துணைவேந்தரும் எமது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவைச் சந்தித்த போது திவ்வியனிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை எனவும் அவரிடமிருந்து எந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆகவே உண்மையில் தாம் நினைத்த குற்றச்சாட்டை பிரசாரப்படுத்தி வருவதுடன் திவ்வியனை மோசமாகத் தாக்கிச் சித்திரவதைக்குட்படுத்தித் துப்பாக்கி முனையில் தாம் நினைத்த குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள வைக்க அவர்கள் முற்பட்டுவருகின்றனர்.

திவ்வியனிடமிருந்து வாகனம் ஒன்றும் போட்டோ பிரதி செய்யும் இயந்திரம், மின்பிறப்பாக்கி, கணனி, பிறினரர் போன்றவையும் கைப்பற்றப்பட்டதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. உண்மையில் இந்த விடயத்தில் பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் முன்பு "City தொலைத்தொடர்பு நிலையம்" நடத்தி வந்த அந்த நிறுவனத்தின் உரிமையாளர் சக தொழில் நிறுவன உரிமையாளருடன் ஏற்பட்ட வியாபாரப் போட்டியின் நிமித்தம் காரணமின்றிப் புலிகளுடன் தொடர்புடையவர் எனப் பொய்க்குற்றம் சாட்டப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவர் தனது வியாபார ஸ்தாபனத்தில் வைத்துப் பயன்படுத்திய வாகனம், கணனி, பிறின்ரர், போட்டோ பிரதி இயந்திரம், மின்பிறப்பாக்கி

(13ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி கண்டனம்

கொழும்பு,ஜூலை11

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை சட்ட விரோதமாகக் கைது செய்து தடுத்து வைத்துள்ளதை தமிழர் விடுதலைக் கூட்டணி கடுமையாகக் கண்டிப்பதாக அதன் சிரேஷ்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கடுமையாகத் தாக்கப்பட்டுள்ள இந்த மாணவனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இல்லையேல் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (உ-3)

## பல்கலை விவகாரத்துக்கு சுமுகத் தீர்வே அவசியம்

### நீதி, சமாதான அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கைதுசெய்யப்பட்ட விவகாரம், கட்டு மீறிய விளைவுகளை ஏற்படுத்துவதைத தவிர்க்கும் வகையில் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு கோரியுள்ளது.

அந்த அமைப்பு இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கைதை அடுத்து சமூகத்தில் குழப்பம் உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டின் தலைமைப் பீடத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் சட்டத்தின் ஆட்சியும், மனித உரிமை மீறல்களும் எவ்வளவு தூரம் பேணப்படும் என்பது சந்தேகமாகவே உள்ளது. அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டோர், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோர் ஆகியோரின் நீதி விசாரணைத் தீர்ப்புகளை நோக்கும்போது கைது செய்யப்பட்ட மாணவனின் அடிப்படை மனித உரிமைகள் எவ்வளவுதூரம் மதிக்கப்படும் என்பது பற்றியும் மனதில் அச்சம் எழுகிறது. இந்தப் பிரச்சினை கட்டுமீறிய விளைவுகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முறையில் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களை பணிவன்புடன் கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது. (உ-3)

## பல்கலை மூடப்பட்டமை குறித்து அதிர்ச்சி தெரிவிக்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சிக்குரியதாகும் என்று ஈ.பி.டி.பி. நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கபட்டிருக்கின்றது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் தொகையை அதிகரிக்கவும், அதன் வளங்களைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை வெற்றிபெற்றுள்ள வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இழுத்து மூடப்பட்டுள்ளமை, தமிழ் பேசும் மாணவர்களின் கல்விப் பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு குந்தகமானது என்பதில் ஐயமில்லை.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் ஒரு குழுவினர் கற்றல், கற்பித்தலுக்கு புறம்பான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தது இரகசியமானதல்ல. இத்தகைய செயறபாடுகள் அரசாங்கத்துக்கெதிரான கண்டனங்கள், விமர்சனங்கள் என்ற ஜனநாயக வரையறைகளுக்கும் அப்பாற்பட்டதாகி படையினருக்கெதிரான இராணுவச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளும் கட்டம்வரை ஒருசிலர் சென்றிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய ஒரு சிலரின் அதிகபிரசங்கித்தனம் கண்டும் மாணவர்கள் பலர் பேசாமடந்தைகளாக இருந்ததும் துரதிர்ஷ்டவசமானது.

அமைதியான முறையில் கல்வியைத் தொடர விரும்பும் பெரும்பாலான மாணவர்களின் எண்ணத்தைப் புறந்தள்ளி ஒரு சிலர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் யாழ்ப்பாணப் பலகலைக்கழக சமூகம் ஒட்டுமொத்தமான பாதிப்புக்குள்ளாகி நிற்கிறது. கவலைக்குரிய இந்த நிலைமையை மாற்றி பல்கலைக்கழகம் மீண்டும் சுமுகமான முறையில் செயற்படும் வகையில் முழு முயற்சிகளும் மேற்கொள்வோம். எனவே பல்கலைக்கழக மாணவர் சமூகமும் பெற்றோரும் அமைதி காத்து எமது முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமென இத்தால் வேண்டுகிறோம்.

- என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது. (உ)

## யாழ்.மாணவர்களின் உயர்கல்விக்கு மூடுவிழா

### ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.மாணவர்களின் உயர் கல்விக்கு மூடுவிழா நடத்தியுள்ளமை மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணியின்) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டமை தொடர்பாக நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாணவர்கள் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

யுத்தத்துக்கும், கைதுகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் எதிரான பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்புணர்வுகளும் போராட்டங்களும், அரசுக்கும் படையினருக்கும் நெருக்குவாரங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தோன்றுகின்றது. மாணவர்களின் நியாயமான போராட்டங்களையும், சுயநிர்ணய உரிமைக்கான பொங்குதமிழ் எழுச்சி விழாக்களையும் அடக்குமுறை அரசினால் சகித்துக்கொள்ள முடியாமல் போனதே யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்குக் காரணமாகும்.

மிகுந்த யுத்த நெருக்கடிகளுக்குள்ளும், இடப்பெயர்வுகளுக்குள்ளும், யாழ்.பல்கலைக்கழகம் திறம்படச் செயற்பட்டு வந்தது. ஆனால் அரசு இன்று யாழ்.மாணவர்களின் உயர் கல்விக்கு மூடுவிழா நடத்தியுள்ளமையானது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அநாவசியக் கைதுகளை நிறுத்தி மாணவர் கல்வி கற்பதற்கான சூழலை ஏற்படுத்துவதை விடுத்து மாணவர் போராட்டங்களுக்காக பல்கலைக்கழகத்தை மூடுவது போராட்டத்தை விஸ்தரிக்கவும், பரவலாக்கவும் வழி வகுக்கும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே முழுத் தமிழ் மாணவர்களையும் போராட்ட களத்துக்குள் இழுக்காமல் கைதான யாழ்.பல்கலைக் கழக மாணவனை விடுதலை செய்து, பல்கலைக்கழகத்தைத் திறந்து விரிவுரைகளை ஆரம்பிக்கச் செய்வதே ஆரோக்கியமான முடிவாக இருக்க முடியும் என்பதை ஈ.பி.ஆர்.எல்.எவ். சுட்டிக்காட்ட விரும்புகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பல்கலையை மூடியது கவலைக்குரிய விடயம்

### மனித நேய அமைப்புகள் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் விடுதலைக்கு சுமுகமான தீர்வைக் காணாது பல்கலைக்கழகத்தை காலவரையறையின்றி முடிவைத்த செயல் கவலைக்குரிய விடயமாகும். இந்த விடயத்தில் நல்லதொரு முடிவை ஏற்படுத்தும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கோருகின்றோம்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைதை அடுத்து பல்கலைக்கழக மாணவர் மத்தியில் பலத்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தக் குழப்பம் யாழ்மாவட்டத்தின் பல்வேறு மட்டங்களில் பரவி மேலும் இலங்கையின் பல பாகங்களுக்கும் பரவிப் பெரும் அமைதியின்மை ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம்.

இப்படியான சூழ்நிலை எழாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை கண்டிப்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் கோரி நிற்கின்றோம். இவ்விடயத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டாலும் மாணவரின் கல்வி எந்த வகையிலும பாதிக்கப்படாத வகையிலும் சுமுகமான ஒரு முடிவை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட யாவரையும் ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

(உ-3)

உதயன்

## புலி வந்த கதை!

'புலி வந்துவிட்டது', 'புலி வந்து விட்டது' என்று புரளி கிளப்பிய இளைஞன், உண்மையில் புலி வந்தபோது காப்பற்றுவதற்கு ஆள்கள் இல்லாமல் புலியிடம் அகப்பட்ட கதையை சிறுவயதில் கேட்டிருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பும் படைகளும் கிளப்பும் புரளிகள் அந்த இளைஞனுக்கு நேர்ந்த கதியைத்தான் அவற்றுக்கு ஏற்படுத்திவிடலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன.

ஒரு மோதல் சம்பவம் நடந்தால், அதில் படையினர் தவிர, யார் அகப்பட்டு செத்தாலும், என்ன, ஏது என்று விசாரிக்காமல் உயிரிழந்தவர் 'பயங்கரவாதி' என்று அறிவிக்கும் படையினரின் பண்பைக் கண்டு தமிழ் மக்கள் சலித்துப்போய் இருக்கின்றார்கள்.

கடந்த வாரம் நெல்லியடியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச அமைப்பாளர் ஒருவர் உயிரிழந்ததும், வழமைபோல் அவருக்கும் 'பயங்கரவாதி' என்ற 'லேபிள்' குத்தப்பட்டதும் நமக்குத் தெரிந்தவையே.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த பின்னரும் பதவி நாற்காலியைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு எட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதை ஆட்சேபித்து பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தலைநகரில் தொடர் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான முஸ்தீபுகளைச் செய்ய ஆரம்பித்ததும், தலைநகரில் முக்கியமான பல பிரதேசங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்த அரசு, இப்போது புலிகள் அப்பிரதேசத்தில் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கவே அந்த வலயங்கள் அறிவிக்கப்பட்டன என்ற புதுக்கதையை அவிழ்த்துவிடுகின்றது.

குறுகிய அரசியல் லாபங்களுக்காகவும் தங்கள் தரப்பைத் தவறான வழியைப் பின்பற்றி காப்பாற்றிக் கொள்வதற்காகவும் ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசுகள் இவ்வாறு பொய் - புரட்டு கூறும் பாணியைத்தான் காலங்காலமாகப் பின்பற்றி வந்திருக்கின்றன என்பதே சரித்திரம்.

1983 ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிரான சிங்களக் காடையரின் இனவெறியாட்டம் கட்டவிழ்த்துவிடப்பட்டபோது, அதற்குப் பின்னணியில் இருந்தவர்கள், தூபம் போட்டவர்கள் யார் என்பது ஆட்சியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல் அப்பாவித் தமிழ் மக்கள்வரை அனைவருக்கும் தெரிந்தே இருந்தது.

ஆனால் 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்ற தமது திட்டத்திற்கு அமைய, அந்தப் பொறுப்பை ஜே.வி.பியின் தலைமீது சுமத்தி, முழு உலகின் தலையிலும் மிளகாய் அரைக்கப் பார்த்தார் ஜெயவர்த்தனா. அதன் விலையை இன்றும் பெரும்பான்மையினரின் இரு தேசியக் கட்சிகளும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இப்படி எதற்கு எடுத்தாலும் பொய்யையும், புரட்டையும், தவறான பிரசாரத்தையும் அவிழ்த்துவிடும் அரசுத் தரப்பின் போக்கினால், அது கூறும் எல்லாக் கதையையும் தமிழ் மக்கள் இந்த அளவில் வைத்துத்தான் எடை போடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பாலியல் வல்லுறவு பற்றிய செய்தியாகட்டும், பல்கலைக்கழக மாணவன் கைதாகட்டும் எந்த விடயத்தில் படைத்தரப்பு எது சொல்ல வந்தாலும் இந்த அளவில் வைத்துத்தான் தமிழ் மக்கள் அந்த விளக்கங்களை எடைபோடுகின்றார்கள்.

கடந்த சனிக்கிழமை இரவு படையினரின் நெருக்கமான நிலைகள் அமைந்துள்ள பகுதியை அண்டி நடந்த பாலியல் வல்லுறவுச் சம்பவம் குறித்து திங்கட்கிழமைப் பத்திரிகைகளில்தான் முதலில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் திங்கட்கிழமை நண்பகலே விசாரணை நடத்தி முடிவு கிடைத்ததுபோல அந்தச் சம்பவத்துக்கான பொறுப்பைப் புலிகள் மீது சுமத்தி இராணுவப் பேச்சாளர் கருத்து வெளியிட்டது கூட இந்த வகையில் நம் தலைமீது மிளகாய் அரைக்கும் செயல்தான்.

இத்தகைய கோயபலஸ் பாணி பிரசார முறைகளை வைத்துக் கொண்டு ஈழத் தமிழ்மக்களைத் திசை திருப்ப முயன்றால் அதன் பலன் பூச்சியமாகத்தான் முடியும்.

# பெரும்போகச் செய்கைக்கு என கொழும்பிலிருந்து விதை நெல் தருவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்கென 2 ஆயிரத்து 800 புசல் விதை நெல்லை கொழும்பில் இருந்து விரைவில் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை கமநல அபிவிருத்தித்திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

ஆயிரத்து 750 புசல் நெல்லை எடுத்துவருவதற்கான முற்பணமே விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட போதும் தற்பொழுது தமது திணைக்களத்தால் 2 ஆயிரத்து 800 புசல் நெல் எடுத்துவரப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களம் மற்றும் சி.ஐ.சி. தனியார் விதை நிறுவனம் ஆகியவற்றிடமிருந்தே நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.ஏ.ரி-402, (500புசல்), ஏ.ரி-353 - (2000புசல்), ஏ.ரி.303(200புசல்), எல்.டி - 356(100 புசல்) ஆகிய நான்கு வகையான இனங்களே எடுத்துவரப்படவுள்ளன.

இவற்றில் எல்.டி.356 இனமானது பரீட்சார்த்தமாக இங்கு எடுத்து வரப்படுகிறது. மூன்றரை மாத சிவப்புச் சம்பா இனமே இதுவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-10-9)

## நாட்டு நடப்பு

### போதை - II

காலை அடிச்சால் மச்சான்
கண்ணிரண்டும் மின்னுதடா
பாதி அடிச்சால் மச்சான்
பகலிரவாய்த் தெரியுதடா
போத்தல் தேடி மச்சான்
போராட்டம் நடத்துகையில்
ஈரல் இல்லை யென்று
எழுதி விட்டான் டாக்குத்தன்.

- விகடகவி -

# கப்பல் பயணிகள் பிறரது ஆவணங்களை தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை

## 'றான்' அலுவலக வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்ப்பாணத்திலிருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் கொழும்பு செல்பவர்கள் தமக்குரியதல்லாத - பிறரது - அடையாள அட்டைகள், பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் மற்றும் கடவுச்சீட்டுக்கள் போன்றவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு 'றான்' அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், 'டெவலப்' செய்யப்படாத படச் சுருள்களையும், 'டெவலப்' செய்யப்பட்ட 'நெக்கட்டிவ்'களையும் பயணிகள் தம்முடன் எடுத்துச் செல்வது கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

இதேபோன்று கடிதங்களுக்குள் - உள்ளீடாக அனுமதிக்கப்படாத பொருள்களைச் சிலர் எடுத்துவருவதால், கடிதங்களை பயணிகளுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாத நிலை உருவாகி வருவதாகவும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புகைப்படச் சுருள்கள், நெக்கட்டிவ்கள், பிறரது அடையாள அட்டைகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், கடவுச்சீட்டுக்கள், இலத்திரனியல் சாதனங்கள், ஒலி நாடாக்கள், ஒளி நாடாக்கள், மின்சார சாதனங்கள் ஆகிய பொருள்களை கப்பல் பயணத்தில் உடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று முன்னரே பலமுறை அறிவுறுத்தியுள்ளபோதும், பயணிகளில் பலர், அனுமதி மறுக்கப்பட்ட பொருள்களை உடன் எடுத்து வந்து, சிரமத்துக்குள்ளாவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேபோல், பயணிகள் மொத்தம் 30 கிலோவுக்கு உட்பட்ட பொருள்களை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### சமய சந்நிதியில்

வலிகாமம்தெற்கு,ஜூலை11

வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ வாலாம்பிகாதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 24ஆம திகதி வரை நடைபெறும்.

24ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை ஊறணி சமுத்திர தீர்த்தத்தில் அத்திரதேவிக்கு காப்பு வெட்டி தீர்த்தாங்குரம், சமுத்திர தீர்த்த ஸ்நானம் என்பனவும் நடைபெற உள்ளன.

(ம-152)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

நல்லூர் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட பாரதிபுரம், திருநெல்வேலிச் சந்தைச் சுற்றாடல், ஆடியபாதம் வீதி ஆகிய இடங்களில் தெருநாய்களைப் பிடித்து அழிக்கும் பணி இன்று காலை 8மணி முதல் 12மணி வரை இடம்பெறும் என்று நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன அறிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் வளர்ப்பு நாய்களை வீடுகளில் கட்டி வைத்திருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ம)

### நினைவுக் கல் திரை நீக்கம்

வலி.தென்மேற்கு,ஜூலை11

நவாலி - சென்பீற்றர்ஸ் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட நினைவுக்கல் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நவாலி வடக்கு - புலவர் வீதியில் மேற்படி நினைவுக்கல் நிறுவப்பட்டுள்ளது. அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மயில்வாகனம் இராசையா நினைவுக்கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (ம-185)

### நாளை

ஆனி 28
வியாழக்கிழமை
திதி: ஷஷ்டி
காலை 7.13 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பின்இரவு 12.44 வரை.
சுபநேரம் : 5.59 - 7.29
ராகுகாலம் : 1.29 - 2.59
(பழைய நேரப்படி)

### பரீட்சைகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை11

சைவபரிபாலன சபையால் இன்று நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த இந்து நாகரிகம், இந்துசமயப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

### இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு

வடமராட்சி,ஜூலை11

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவசக் கண்ணாடி வழங்கும் விழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வி.குணானந்தம், யாழ்.போதனா வைத்தியசாலை மயக்க மருத்துவ நிபுணர் டாக்டர் ஆர்.கணேசமூர்த்தி, ஓய்வுபெற்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே.மாணிக்கம் ஆகியோர் முதல் கண்ணாடிகளை வழங்கி ஆசீர்வதிப்பார்கள்.

கடந்த மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற இலவச கண்பரிசோதனை முகாமில் தெரிவானவர்களுக்கும் கடந்த மாதம் 17ஆம் திகதியன்று இலவசக் கண்ணாடிகளைப் பெறாதவர்களுக்குமாக 225 பேருக்கு ஞாயிறன்று இலவசக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபை இக்கண்ணாடிகளை கொள்வனவு செய்து வழங்கியுள்ளது. (ம173)

### உதயவாக்கு

சிறு செயல்களிடத்தும் ஆழ்ந்து கருத்துச் செலுத்துபவன் சான்றோன்.

### நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பும்

வலிகாமம் தெற்கு,ஜூலை11

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா, பரிசளிப்பு விழா, நிறுவுனர் நினைவு நாள் விழா என்பன இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.சண்முககுலகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும் ஆசிரிய ஆலோசகர் வி.ஆ.இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

(ம-152)

# காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஜூலை11

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமல்போன 9 பேரின் விசாரணைகளை மேற்கொள்வதற்காக சாட்சிகளை அழைத்துள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் பெயர்- விவரம் வருமாறு:-

★ பொன்னம்பலம் (கோவை இல. - 211) பொன்னுத்துரை (உடுவில், சுன்னாகம்)

★ கந்தசாமி றஜிதன் (கோவை இல. - 9/58) சின்னராசா சிவதாஸ் (24/2, றக்கா வீதி, சுண்டிக்குளி)

★ சொலமன் அருள்நேசன் (கோவை இல. - 9/44) சிவராசா சிறீரஞ்சன், (தவசிகுளம், மிருசுவில்)

★ நவரத்னம் யோகேஸ்வரன் (கோவை இல. - 408) நவமலர் (நவாலி மேற்கு, மானிப்பாய்)

★ அருள்ராஜ் அனிஸ்ரஸ் (கோவை இல. - பி - 238) பாத்திமா புஸ்பம், ராசாத்தி (ஆனைக்கோட்டை, அகதிமுகாம்)

★ சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கோவை இல. - பி - 442) அந்தோனிப்பிள்ளை டஸ்மி (13, புதிய வீதி, குருநகர்)

★ கந்தசாமி செந்தீபன் (கோவை இல. - பி - 1/9/114) கிருஸ்ணலதா (மிருசுவில் கிழக்கு)

★ துரைராஜ் சிவகுமார் (கோவை இல. - பி - 1/9/32) பாலகிருஸ்ணன் ஜெயசததிபா (கோண்டாவில் கிழககு)

★ காசிப்பிள்ளை கஜேந்தன் (கோவை இல. - 09/1188) புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை (488/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்)

(ம-6-9)

# அமெ.தளபதி இலங்கை வருகை

கொழும்பு, ஜூலை11

அமெரிக்கப் படைகளின் பசுபிக் பிராந்தியதுக்கான தளபதி அட்மிரல் டெனிஸ் களரர் பிளையர் நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் றோஹான் எஸ். தளுவத்தை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்கத் தளபதியை வரவேற்றார். அட்மிரல் பிளையருடன அமெரிக்காவின் மூத்த இராணுவ அதிகாரிகள் சிலரும் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அட்மிரல் பிளையர் குழுவினர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் நாட்டின் தற்போதைய நிலை மற்றும் ஸ்ரீலங்காப் படைகளின் நிலை என்பன குறித்து விரிவாக ஆராய்வர் என்றும் கூறப்படுகின்றது.

(ம)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



நிலத்துள் இருந்து மிதிவெடி கேட்டது
"கால்களே சௌக்கியமா?"
"நீங்கள் இருக்கும் இடத்தைத்
தவிர்த்துக்கொண்டால் எல்லாம் சௌக்கியமே"
கால்கள் சொன்னது.

# அரசும் புலிகளும் பேச்சில் பங்குபற்ற
# இந்தியா தார்மீக ஆதரவு தரவேண்டும்
## இந்து சமயப் பேரவை கோருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 11

இலங்கை அரசும் — விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வசதியாக இந்தியா தனது தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.

யாழ்-இந்துசமயப் பேரவை இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிறன்று பேரவையின் தலைவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பி தலைமையில் அளவெட்டி நாகவரத நாராயண சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ பன்னெடுங்காலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கை மூலம் ஒருபோதும் தீர்த்துவிட முடியாதென்பதைக் கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் நன்கு புலனாக்கியுள்ளன. மேலும் இராணுவ நடவடிக்கை இந்நாட்டில் பெரும்பான்மை மதங்களை அனுஷ்டிக்கும் பௌத்தர்களையும், இந்துக்களையும் கொன்றொழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கு — கிழக்கில் உள்ள பல்லாயிரக்கணக்கான இந்து ஆலயங்களும், இந்து நிறுவனங்களும் பகுதியாக அல்லது முழுமையாகத் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் விதவைகள் ஆகியும், அகதிகள் ஆகியும் அகதி முகாம்களிலும், மரநிழல்களின் கீழும் வாழும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. எமது பொருளாதார வளம் முழுவதும் சூறையாடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது எமது மக்கள் எந்தப் பிரதேசத்திற்கும் சுதந்திரமாகச் சென்றுவர முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இத்தகைய நிலைக்கு முடிவு கட்டுவதற்காக விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்வர வேண்டும் என இந்துக்கள் சார்பில் சம்பந்தப்பட்ட இருதரப்புகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

தற்போது நடைபெறும் போரைப் பயன்படுத்தி ஆதரவற்று வாழும் இந்துக்களை மதம் மாற்றும் கிறிஸ்தவக் குழுக்கள் தமது மத மாற்ற நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த எமது மக்களிடையே பிரிவினையைத் தூண்டும் இத்தீய நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவக் குழுக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டால், இதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவக் குழுக்களே ஏற்றுக் கொள்ள வேண்டிவரும்.

இந்துமதம் அன்பை அடிநாதமாகக் கொண்டது. இந்து ஆலயங்கள் சில இக்கொள்கைக்கு மாறாக ஆடு, கோழிகளை பலியிடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை அரசும், எதிர்க்கட்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்து செயற்படுவதோடு, இனப்பிரச்சனைத் தீர்வுக்கான நியாயமான தீர்வுத் திட்டத்தை முன்வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடக்கூடிய சுமுகமான, ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்துமாறு' சகல தரப்பினரையும் உதவுமாறு இப்பேரவை கோருகின்றது.

(ம-7)

# நிரந்தர நியமனம் கிடைத்த தொண்டர் ஆசிரியர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தொண்டர்ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரில், தெரிவுக்குத் தகுதியான 142 பேரின் பெயர்ப்பட்டியல் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு தொடக்கம் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றுவோரின் பெயர்கள் தனியாகவும் —

1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் கடமையாற்றுவோரின் பெயர்கள் தனியாகவும் —

அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 142 பேரின் பெயர், விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குப் முன்பு தொடக்கம் பணியாற்றுவோரின் 86 பேரின் பெயர்களும், 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் பணியாற்றுவோரில் 56 பேரின் பெயர்களும் உள்ளன.

பெயர்களுடன் அவர்கள் பணியாற்றும் பாடசாலை, வலயநிலை, மாவட்ட நிலை, நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மற்றும் கற்பிக்கும் பாடநெறி ஆகிய விவரங்களும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்படி விவரங்கள் அடங்கிய பட்டியல் ஐந்து வலயக் கல்விப் பணிமனைகளின் விளம்பரப் பலகைகளிலும் ஒட்டப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)

# கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 11

படையினரின் பாவனையில் உள்ள பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக் காணியை பாடசாலையின் பாவனைக்காகத் தருமாறு வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரியிடம் கோரிக்கை விடுப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலையின் அபிவிருத்திச் சபை இக்கோரிக்கையை விடுத்துள்ளது. (ம-173)

# சங்கானை கல்விக் கோட்டத்தில் 417 மாணவர்களுக்கு சத்துணவு

வலிமேற்கு, ஜூலை 11

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் முதற்கட்டமாகச் சேர்ந்த 417 பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் சங்கானைக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வலி. மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள் சமர்ப்பித்த மாணவர்களின் விவரங்கள் ஆராயப்பட்டன. கூட்டத்தில் கலந்து கொண்ட வட்டு. இந்துக் கல்லூரி அதிபர் தனது பாடசாலையில் 26 மாணவர்களுக்கு 'சத்துணவு வழங்க வேண்டும் எனத் தன்னால் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன எனவும்—

ஆனால் கல்விக் கோட்ட அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் அவர்களது பெயர்கள் இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந் வட்டு. இந்துக் கல்லூரி மாணவர்கள் 26 பேர் உட்பட 417 மாணவர்களுக்கு சத்துணவு வழங்க குழு சிபார்சு செய்தது.

(ம-175)


## Coconut Planter's Association - Northern Province

வடமாநில

## தெங்கு செய்கையாளர் சங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் அனுப்பப்பட்ட 14/6/2001 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலமாகப் பின்வரும் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. அவற்றை 20/7/2001 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விவரங்கள்:-

1. வடமாநில தெங்கு உற்பத்தியாளர் சங்க, தோட்ட உரிமையாளர் விண்ணப்பப் படிவத்தில் உள்ள எட்டு (8) வினாக்கள்.
2. Power of Attorney கொண்டு தோட்டம் பார்ப்பவர்கள் தங்கள் Power of Attorneyயில் தோட்டப் பணத்தைக்கையாளுவதற்கான அனுமதி அதில் இருத்தல் வேண்டும். அத்துடன் POWer of Attorney பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. தோட்ட உரிமையாளர், தங்கள் தோட்டங்களில் வேலை செய்தவர்களின் விபரமும், எண்ணிக்கையும் தருதல் வேண்டும்.

வடமாநில தெங்கு செய்கையாளர் சங்க செயற்குழு.

இல. 104, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(89933)


# வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர இதுவரை நடவடிக்கைளடுக்கவில்லை
## கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு விழாவில் உரை

வலி. வடக்கு, ஜூலை 11

வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து ஒரு தசாப்த காலம் கழிந்த நிலையிலும் அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவது குறித்துப் பெரும் அக்கறை காட்டுவதில்லை.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டுறவுப் பெரியார்கள், கூட்டுறவாளர்கள், மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி சங்க விழா மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்குப் பகுதி மக்களுக்குச் சாபக்கேடாக அமைந்தது பலாலி விமான நிலையமும், இராணுவத் தளமும் ஆகும். கூட்டுறவாளர்கள் எதற்கும் முகம் கொடுத்து வாழக்கூடியவர்கள், அத்தகையவர்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாக வலி. வடக்குப் பிரதேசம் காணப்படுகின்றது.

தென்மராட்சியில் உள்ள மக்களைக் குடியேற்ற வேண்டும் என்று முண்டியடிக்கின்றார்கள். அம்மக்களை மீளக் குடியேற்ற நடவடிக்கையெடுக்கப்படுவதை வரவேற்கின்றோம். ஆனாலும் கூட வலி. வடக்குப் பகுதி மக்கள் தமது சொந்த மண், சொத்துக்கள், உடைமைகளை இழந்து வந்து பதின்மூன்று வருடங்கள் முடிவடைந்துள்ளன. இருப்பினும் அம்மக்கள் பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்தும் அவர்களை மீள்குடியேற்ற வேண்டும் என்று எவரும் அக்கறையெடுக்க முன்வரவில்லை.

கூட்டுறவாளர்களாகிய நாங்களாவது இன்று ஒரு முடிவை எடுக்கவேண்டும். நாங்கள் இதில் ஒன்றாகச் சேர்ந்து எமது சொந்த மண்ணுக்குச் செல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் விழா பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. கூட்டுறவுத் துறையில் பல்வேறு வகைகளில் தொண்டாற்றியவர்கள் சேவையாற்றியவர்கள், தொழிலாளர்கள் என்று பலதரப்பட்டவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது கூட்டுறவுச்சங்க அமைப்பு முறையில் மக்கள் நேரடியாக பங்களிப்பு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை மாற்றியமைத்து மக்கள் நேரடியாக பங்கேற்க வேண்டும் என்பதற்காக உரும்பிராயில் பரீட்சார்த்தமாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது கூட எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை; பூச்சியமான முடிவே கிடைத்துள்ளது.

தெல்லிப்பளை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து பல் வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றது. ஆனாலும் கூட சங்க ஊழியர்களின் திறமையும் ஊக்கமுமே ஓரளவுக்கேனும் சங்கம் சிறந்த முறையில் இயங்கக் கூடியதாக இருப்பதற்குக் காரணமாகும்.

நெருக்கடிகளுக்கு மத்தியில் ஊழியர்கள் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள அதிகரிப்பை 2000 ஆம் ஆண்டில் இருந்து வழங்க முடியவில்லை இதற்கு இடைஞ்சலாக யார் இருக்கின்றார்கள் என்பதை நான் கூறவிரும்பவில்லை; கூறவும் முடியாது உள்ளது.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியினால் கூட்டுறவு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கூட்டுறவுஆணைக்குழுவிடம்- 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவுகளுக்கு கூட்டுறவு உதவி ஆணையாளரின் முன் அனுமதி பெற வேண்டும் என்று இருப்பதை 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் என்று மாற்ற வேண்டும் என்றுகூறிஉள்ளேன். அதனை அவர்களும் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.

இன்று பிரச்சினைகள் இல்லாத உலகம் இல்லை. அதே போன்று பிழைகள் விடாத மனிதன் இல்லை. ஆனாலும் கூட எது சரி எது பிழை என்பதை ஆராய்ந்து பார்த்து சிந்தித்துப் உணர வேண்டும். — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

வலி. வடக்கு பிரதேசசெயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தனது உரையில் தெரிவித்ததாவது:-

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும் போது பலநோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அண்மைக் காலங்களில் அவை ஒரு நோக்குடன் தான் இயங்குகின்றன.

தனியார் கடைகளிலும் பார்க்கக் கூடிய விலை கொடுத்துப் பொருள்களை சங்கத்தில் பெறவேண்டிய நிலமை காணப்படுகின்து. இத்தகைய தன்மையை கூட்டுறவாளர்கள் மாற்ற முன்வரவேண்டும்'

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவாளர் வீரசிங்கத்துக்கு ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது போன்று வலி. வடக்கில் கூட்டுறவாளர் சிவமகாராசாவின் பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட வேண்டும்.

வலி. வடக்குப் பகுதியில் ஒரு கலாசார மண்டபம் இல்லாது இருப்பது பெரும் குறையாகும். அந்தக்குறையை நிவர்த்திக்கக் கூடிய வகையில் சிவமகாராசாவின் பெயரிலான மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-86,

# டாங்கிகள், புல்டோசர்கள் சகிதம்
# பலஸ்தீனப் பிரதேசத்துக்குள் இஸ்ரேலியப்படை நுழைந்தது

## யுத்த நிறுத்தம் கேள்விக்குறி

ஜெருசலேம்,ஜூலை11

காஸாப் பகுதியில் நேற்றுக் காலை பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேலிய படையினருக்கும் இடையே கடும் மோதல்கள் மூண்டன.

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குள் இஸ்ரேலிய இராணுவத்தினர் டாங்கிகள் மற்றும் புல்டோசர்களுடன் நுழைந்திருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்போது இருதரப்பினரிடையே கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும்-

இதில் குறைந்தது 5 பலஸ்தீனர்கள் காயமடைந்ததாகவும் -

ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்காவின் முயற்சியில் மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் யுத்த நிறுத்தம் நடைமுறைப படுத்தப்பட்ட பின்னர், பலஸ்தீனப் பிரதேசம் ஒன்றுக்குள் இஸ்ரேலிய ராணுவம் டாங்கிகள், புல்டோசர்கள் சகிதம் நுழைவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னதாக பலஸ்தீனப் பகுதிகளுக்குள் நுழைந்த இஸ்ரேலிய ராணுவத்தின் புல்டோசர்கள் பலஸ்தீனக் குடியிருப்புகளையும், அகதி முகாம்களையும் இடித்துத் தள்ளியிருந்தன.

இதற்கிடையில், பலஸ்தீன தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்த தனது இராணுவத்துக்கு வழங்கிய அனுமதிக்கு ஆதரவு திரட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கு பலஸ்தீனக் குடியிருப்புகளை புல்டோசர்கள் மூலம் இடிக்கும் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகள் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இதேசமயம், பலஸ்தீன பொது மக்கள் மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது, யுத்தநிறுத்தம் உட்பட அமைதி முயற்சிகளைக் கேள்விக் குறியாக்கியுள்ளதாகக கவலை தெரிவிக்கப்பட்டது. (ஒ)



சீனாவின் ஜியாங்சு மாகாணத்தின் நஞ்ஜிங் யங்ட்ஜ் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தின் பக்கச் சுவரின் மீது ஏறிவிட்ட பஸ் ஒன்று ஆற்றுக்கும் வீதிக்கும் நடுவே ஊசலாடிக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

அதிக வேகத்தில் சென்ற பஸ், வீதியின் நடுவே வந்த காரின் மீது மோதுவதைத் தவிர்க்க பஸ் ஓட்டுநர் சடுதியாகத் திருப்பிய சமயத்தில் பாலத்தின் சுவர் மீது ஏறியது. பஸ்ஸிலிருந்த 40பேரும் ஒருவர் பின் ஒருவராக யன்னல்களின் வழியே வெளியேறி உயிர் தப்பினர்.

## சர்க்கஸ் குழுவிடமிருந்து காட்டு விலங்குகள் மீட்பு

புதுடில்லி,ஜூலை11


இந்தியாவின் வடபகுதி மாநிலமான உத்திர பிரதேசத்தில் 'சர்க்கஸ்' குழுக்களிடமிருந்த சிங்கங்கள் உட்பட காட்டு விலங்குகள் மீட்கப்பட்டு, கர்நாடக மாநிலத்தில் உள்ள வனவிலங்கு சரணாலயத்தில் விடப்பட்டன.

காட்டு விலங்குகள் 'சர்க்கஸ்' போன்ற கண்காட்சிகளில் பயன்படுத்தப்படக்கூடாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து முதல்தடவையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஒ)

## மாநிலங்களவை வேட்பாளராக சரத்குமார்

சென்னை,ஜூலை11

இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையின் தமிழகப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் தி.மு.க. சார்பில் நடிகர் சரத்குமார் வேட்பாளராக நேற்று அறிவிக்கப்பட்டார்.



எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெற உள்ள இந்தத் தேர்தலில், சட்டசபை உறுப்பினர்கள் வாக்களிப்பர்கள். சட்டப்பேரவையில் தற்போது 28 உறுப்பினர்களைப் பெற்றுள்ள தி.மு.க.தனது கூட்டணி கட்சிகளின் உதவியுடன் ஓர் இடத்தை சுலபமாகப் பெறமுடியும். (ஒ)

## விசாரணை மன்றத்தை தி.மு.க. நிராகரிப்பு

சென்னையில் மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் நடைபெற்றது தொடர்பாக கருணாநிதி கைதான போது, பொலீஸார் அத்துமீறி நடந்ததாகக் கூறப்படுவது குறித்து விசாரிக்க தமிழக அரசு நியமித்துள்ள தனிநபர் விசாரணை ஆணையத்தை தி.மு.க. நிராகரித்துள்ளது.

## இவான்செவிக் 'விம்பிள்டன்' சாம்பியன்

லண்டன்,ஜூலை11

'விம்பிள்டன்' டெனிஸ் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் குரோஷிய வீரர் கோரன் இவான்செவிக் வெற்றி பெற்றார்.

தன்னை எதிர்த்தாடிய ஆஸ்திரேலிய வீரர் பீட்டர் ராவடரை 6-3, 3-6, 6-3, 2-6, 9-7 என்ற செட் கணக்கில் அவர் தோற்கடித்தார்.

## உலகப் பொருளாதார வீழ்ச்சி குறித்து
# அமெரிக்காவும் ஐரோப்பாவும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

ரோம்,ஜூலை11

உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு யார் காரணம் என்பது குறித்து ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கடும் கருத்து மோதல்கள் தோன்றியுள்ளன.

கடந்த சனிக்கிழமை ரோமில் நடைபெற்ற ஜி-7 நாடுகள் எனப்படும் வளர்ந்த நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் இந்தக் கருத்து மாறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

உலகப் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு அமெரிக்கா தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் -

ஆனால் ஐரோப்பிய நாடுகள் அத்தகைய உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும்-

அமெரிக்க நிதியமைச்சர் போல் ஓ நெய்ல் மாநாட்டில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியும் ஸ்திரத்தன்மையும் ஏற்படுவதை உறுதி செய்வதற்கு அமெரிக்கா தன்னுடைய கடமையை செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் அமெரிக்க நிதியமைச்சரின் கருத்தை முற்றாக நிராகரித்த ஐரோப்பிய நாடுகளின் நிதியமைச்சர்கள் பொருளாதார வீழ்ச்சிக்கு தங்களை மட்டும் குற்றம் சொல்வதை நிராகரித்தனர்.

அரசியல் ரீதியாக அமெரிக்கா செயற்படுத்திய சில தீர்மானங்கள் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகியதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த மாநாட்டில், சர்வதேச அளவில் உலகமயமாதலுக்கு எதிர்ப்பு அதிகரிப்பது குறித்தும், சர்வதேச நிதியமைச்சு குறித்தும் ஆராயப்பட்டது.

## சிலியின் முன்னாள் அதிபர் மீதான விசாரணைகள் கைவிடப்பட்டன

தென்அமெரிக்க நாடான சிலியில் 1973ஆம் ஆண்டு, சதிப் புரட்சியின் பின்னர் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான நீதி விசாரணைகளில் தோற்றுவதற்கு, முன்னாள் சர்வாதிகாரி ஒகஸ்ரோ பினோஸேவின் உடல் நிலை ஏற்றதாக இல்லையென்று மேன் முறையீட்டு நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்தத் தீர்ப்பையடுத்து பினோஸேவின் மீதான குற்ற விசாரணைகள் கைவிடப்பட்டுள்ளன. தற்போது 85வயதாகும் பினோஸே உடல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரவித்ததையடுத்தே விசாரணைகள் கைவிடப்பட்டன. 1973ஆம் ஆண்டு இடம்பெற்ற சதிப்புரட்சியின் பின்னர், அப்போது அதிபராக இருந்த பினோஸே இடது சாரிகள் என்று சந்தேகிக்கப்பட்ட 75 பேரை படுகொலை செய்ய உத்தரவிட்டதாக, அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ஒ-4)



சீனாவின் சொங்குயிங் மருத்துவமனையில் சமீபத்தில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை அவர்களின் தாய் கையில் ஏந்தி நிற்கும் காட்சி.

ஒட்டிப் பிறந்துள்ள இந்தக் குழந்தைகளை சத்திர சிகிச்சை மூலம் பிரிக்க சீனப் பணமான 3 இலட்சம் யுவான்கள் செலவாகும் என்பதால், இந்த ஏழைத் தாய் மருத்துவமனை வாசலில் நின்று போவோர் வருவோரிடம் சத்திர சிகிச்சைக்கு பண உதவி செய்யும்படி கேட்டு வருகிறார்.

## ஜமெக்காவில் படையினருடன் உள்ளூர் வாசிகள் துப்பாக்கிச் சமர்

கிஸ்டன்,ஜூலை11

ஜமெக்காவின் தலைநகர் கிஸ்டனில் பாதுகாப்புப் படையினருக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையே கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்று வரும் துப்பாக்கிச் சமரில் 20பேர் உயிரிழந்தனர்.

கிஸ்டனில் அண்மைக் காலமாக வன்முறைகள் அதிகரித்ததையடுத்து சட்டவிரோத ஆயுதங்களை தேடிக் கைப்பற்றும் நடவடிக்கையினைப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டனர்.

அப்போதே இந்தத் துப்பாக்கி மோதல்கள் இடம்பெற்றன. நிலைமை கட்டுக்கடங்காமல் போனதையடுத்து பிரதமர் பிஜே பீட்டர்சன் தலைநகரில் அமைதியை ஏற்படுத்த இராணுவத்தினரை அழைத்துள்ளார்.

அத்துடன் பரவி வரும் மோதல்களைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு உதவிகளை நாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-4)

## சிறப்பாக வாழக்கூடிய நாடுகளில் நோர்வே முதலிடம் வகிக்கிறது

ஜெனிவா,ஜூலை11

உலகில் மிகச் சிறப்பாக வாழ்க்கை நடத்தக்கூடிய நாடுகளின் பட்டியலில் நோர்வே முதலிடத்தைப் பெற்றுள்ளது.

தனிநபர் வருமானம், சுகாதார நலன்கள், ஆயுள்காலம், கல்வித்தரம் என்பவற்றின் அடிப்படையில் ஐ.நா. மனிதவள அபிவிருத்தி நிறுவனம் தயாரித்துள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா, கனடா என்பன நோர்வேக்கு அடுத்தடுத்த இடங்களைப் பெறுகின்றன. அமெரிக்கா 6 ஆவது இடத்தில் உள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டப்பிரிவு 1990ஆம் ஆண்டு முதல் இத்தகைய ஆய்வை ஆரம்பித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கப்பால் மக்கள் வாழ்க்கைத் தரத்தில் வெற்றை எதிர்பார்க்க முடியும் என்று புள்ளி விவரங்களைக் கருத்தில் கொண்டு நாட்டின் வளர்ச்சியைக் கணக்கிடும் பரீட்சார்த்த முயற்சியாக இந்த ஆய்வு வருடந்தோறும் நடத்தப்படுகிறது.

இந்த வருட ஆய்வில், தொழில் நுட்பமும், மரபணு ரீதியாக மாற்றப்பட்ட தாவரங்களும் முக்கிய இடத்தைப் பெற்றன.

பட்டியலில் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் கடைசி இடங்களில் உள்ளன. (ஒ)

## ஊரடங்கை மீறிப் பேரணி

இம்பால்,ஜூலை11

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் ஊரடங்கு உத்தரவையும் மீறி சுமார் 3ஆயிரம் பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

நாகா தீவிரவாதிகளுடனான யுத்த நிறுத்தத்தை நாகலாந்தில் இருந்து, மணிப்பூர் மாநிலத்துக்கு மத்திய அரசு விஸ்தரித்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பேரணி இடம்பெற்றது. (ஒ)

## தேர்தலுக்கு காலக்கெடு

பாகிஸ்தானில் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று 16 எதிர்க்கட்சிகள் அடங்கிய கூட்டமைப்பான ஜனநாயக மீட்புக் கூட்டணி கோரியுள்ளது. இராணுவ ஆட்சியாளர் அமைத்துள்ள தேசிய பாதுகாப்பு மன்றத்தையும் கூட்டணி நிராகரித்துள்ளது.

## 61 வயதில் ஆண்குழந்தை பெற்ற அதிசயப் பெண்மணி

சான்பிரான்ஸிஸ்கோ,ஜூலை11

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ மருத்துவமனையில் 61 வயதுப் பெண்மணி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை ஆண் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார்.

இதன்மூலம் உலகில் வயது கூடிய தாயார் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

மருத்துவரீதியாக 50 வயதின் பின்னர் பெண்கள் குழந்தைக்குத் தாயாவது மிகவும் அரிதான விடயமாகும்.

ஆனாலும் இதுவரை 63 வயதில் இரு பெண்மணிகள் தாய்மைப் பேற்றை அடைந்துள்ளபோதிலும், அவர்கள் செயற்கை முறையிலேயே கருத்தரித்திருந்தனர்.

ஆதலே 61 வயதில் செயற்கை முறையை நாடாமல் கருத்தரித்து குழந்தை பெற்றுள்ள பெண்மணி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சான்பிரான்ஸிஸ்கோ மருத்துவமனையில் தற்போது தங்கியுள்ள அந்தப் பெண்மணியும் அவரது ஆண் குழந்தையும் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## சுரங்கப்பாதை வழியாக
# பிரேஸில் சிறையிலிருந்து 105 கைதிகள் தப்பினர்

சாவெளலோ,ஜூலை11

தென் அமெரிக்காவின் மிகப் பெரிய சிறைச் சாலையாகக் கருதப்படும் பிரேஸில் கராத்திரு சிறைச்சாலையிலிருந்து சுரங்கம் அமைத்து 105 கைதிகள் தப்பிச் சென்றனர்.

பிரேஸிலின் வர்த்தகத் தலைநகரான சாவெளலோவின் வீதிகளின் வழியாக அந்தக் கைதிகள் சென்றிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கராத்திரு சிறைச்சாலைக்குள் தோண்டப்பட்ட சுரங்கத்தின வழியாகச் சென்ற கைதிகள் வெளியே சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வேடத்தில் நகருக்குள் தலைமறைவாகியுள்ளனர்.

தப்பிய கைதிகளில் ஒருவர் மட்டும் மீண்டும் சிக்கியுள்ளதாக பிரேஸில் பொலீஸார் தெரிவித்தனர்.

சமீபத்தில் கராத்திரு சிறைக் கைதிகள், கடத்தி வரப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி மற்றைய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 30 ஆயிரம் கைதிகளை கலகம் நடத்தத் தூண்டியது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நேபாள அரண்மனை ஊழியர் புதிய மன்னரால் பணி நீக்கம்

காத்மண்டு,ஜூலை11

நேபாள அரசகுடும்பப் படுகொலைகள் நிகழ்ந்த போது மறைந்த மன்னர் பிரேந்திரா குடும்பத்தினருக்கு மெய்ப்பாதுகாவலர்களாக இருந்தவர்கள் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய மன்னர் ஜியனேந்திரா இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற போது, இறந்த மன்னர் மற்றும் அவரது குடும்பத்தவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கத்தவறியதற்காக 3 கனிஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் மன்னரால் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக, நேபாள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதம்குமார் ஆச்சார்யா தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகள் ஸ்தம்பிக்க அரசின் பேரினவாதப் போக்குத்தான் காரணம்

## சுனந்த தேசப்பிரிய கூறுகிறார்

**சிறிலங்கா அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்பாரின் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே சொல்ஹெய்ம், ஏற்பாட்டாளராக - மூன்றாம் தரப்பினராக - ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனால் விடுதலைப் புலிகளின் கருத்து அறியப்படாமல் சொல்ஹெய்ம் அரசால் தன்னிச்சையாக ஓரங்கட்டப்பட்டுள்ளார். 1956இல் கைச்சாத்திடப்பட்ட பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கும் இந்நிலையே ஏற்பட்டது என்கிறார் கட்டுரையாளர். சிறந்த சிந்தனையாளரும் - எழுத்தாளருமான சுனந்த தேசப்பிரிய ஞாயிறு "லங்காதீப" பத்திரிகையில் வரைந்த கட்டுரை இது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

எரிக் சொல்ஹெய்மை சமாதான நடவடிக்கைகளில் இருந்து நீக்குவது என பொ.ஐ.முன்னணி



அரசு தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகளை இதுவரை அரச செய்திஊடகங்கள் மறுதலிக்கவில்லை. கடைசியாக சொல்ஹெய்ம் சிறிலங்கா வந்தபோது அவருக்கு ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது. அதாவது நோர்வே வெளிநாட்டமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவும் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தபோது அந்த உரையாடல் முடியும வரை வெளி விறாந்தையில் காத்திருந்ததே அந்த புதிய அனுபவமாகும். சொல்ஹெய்ம் அந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படவில்லை.

அடுத்துவரும் சந்திப்புகளின் போது அவரைவிட (சொல்ஹெய்மைவிட) மேல் மட்டத்திலுள்ள ஏற்பாட்டாளர்களை ஈடுபடுத்துவது என இரண்டு அரசுகளும் இணங்கியுள்ளன என பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. சொல்ஹெய்மின் சமாதான முயற்சிகள் முற்றுப் பெற்றுவிட்டன என்பதே இதன் கருத்தாகும்.

சொல்ஹெய்மை நீக்குவது தொடர்பான தீர்மானம் சிறிலங்கா மற்றும் நோர்வே அரசுகளுக்கு இடையே இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே மேற்கொள்ளப்பட்டது. சமாதான முயற்சிகளில் சிறிலங்கா அரசு மற்றும் அதற்குச் சமமான அந்தஸ்தைக் கோரும் விடுதலைப புலிகள் குறித்து அங்கு கருத்துக்கள் பரிமாறப்படவில்லை.

சிறிலங்கா அரசினதும் விடுதலைப்



புலிகளினதும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே சொல்ஹெய்ம தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு பொது உடன்பாட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியை, விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்டறியாது நீக்க முடியுமா? அது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உதவுவதாக அமையுமா? எரிக் சொல்ஹெய்மை விலக்குவது தொடர்பாக தங்கள் கருத்துக் கேட்டறியப்படவில்லை எனவும், அவரை நீக்கியது தொடர்பாக இதுவரை தங்களுக்குத் தெரிவிக்கவில்லை எனவும் விடுதலைப் புலிகள் பகிரங்கமாகக் குறைஞ்சாட்டி உள்ளனர்.

இந்த விடயத்தை மிகவும் பாரதூரமாக எடுக்கத் தேவையில்லை எனக் கூறுவோரும் உள்ளனர். இருப்பினும் சமாதானச் செயற்பாடுகளின் நோக்கங்களின் அடிப்படை இந்தச் செயல் மூலம் மீறப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. அதாவது ஆரம்பத்திலிருந்தே அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டு இரு தரப்பினரதும் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்த பின்னர் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு தரப்பினர் மீது மறு தரப்பினர் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கு இவ்வாறான நடைமுறைகள் கட்டாயம் தேவை.

1958இல் பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் இரு தரப்பினரின் உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பண்டாரநாயகா அந்த ஒப்பந்தத்தை ஒருதலைப் பட்சமாகக் கிழித்தெறிந்தார். 1966இல் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் இரு தரப்பினரது உடன்பாட்டுடன் கைச்சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தமும் தமிழர் தரப்பின் கருத்தறியப்படாமல் கிழித்தெறியப்பட்டது. 1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்து - லங்கா ஒப்பந்தமும் பிரேமதாசா, ஜனாதிபதியான காலம் தொடக்கம் இன்றுவரை செயல்வடிவம் பெறாது பலமிழந்த நிலையில் காணப்படுகிறது. இந்த நாட்டிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து ஒரு குற்றத்தைச் சுமத்தி வருகின்றனர். அதாவது தங்களது உரிமைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தீர்வினைக் காண்பதிலும் பார்க்க, சிறிலங்கா அரசுகள் அவற்றின் உள்ளக நடவடிக்கைகள் மூலம் பேரினவாதத்திற்கு இடமளிக்கின்றன என்பதே அதுவாகும்.

எரிக் சொல்ஹெய்மை விலக்குவது என சிறிலங்கா அரசு எடுத்த முடிவானது தமிழ் அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி அது பார

**தமிழில்: கஜனி**

தூரமான பின்னடைவுகளை உருவாக்கும். கடந்த வாரம் தமிழ் அரசியல் விமர்சகர் ஒருவர் வெளியிட்ட கருத்தின் முடிவில் 'கதிர்காமரும்,



குமாரதுங்கவும் (ஜனாதிபதி) ஆட்சிப்பீடத்தில் இருக்கும்வரை எந்தவொரு சமாதான முயற்சியும் வெற்றி பெற வாய்ப்பில்லை' எனத் தெரிவித்திருந்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# இதயமே! உன் விலை என்ன?

## சந்தைக்கு வருகிறது கண்ணாடி இதயம்

இதயத்தின் விலை என்ன?

அது ஒரு கடைச்சரக்கா?

ஆம். சிலருக்கு அது கடைச் சரககுத்தான். வேறு சிலர் அதற்காக உயிரையே விடுகிறார்களே. உள்ளதெல்லாம் விற்றாலும் கடையில் விற்கும் இதயம் கூட கைக்குக் கிடைக்காது. கிடைத்தாலும் அதை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம். அதை நெஞ்சிலே பொருத்திக்கொள்ள அதைவிடச் செலவு அதிகம்.

கடந்தவாரம் முதல் எங்கும் பரபரப்பாக பேசப்படுவது இந்தச் செயற்கை இதயம் பற்றித்தான். இது



இதயத்துடன்
டேவிட் லெடமன்

ஓர் இரத்தத்தைப் 'பம்' பண்ணும் இயந்திரம். டைட்டேனியமும் பிளாஸ்ரிக்கும் கலந்து இது உருவாக்கப்பட்டது. கடந்தவாரப் பத்திரிகைகள் பலவற்றிலும் இந்தச் செயற்கை இதயத்தின் படம் வெளியாகி இருக்கின்றது.

மருத்துவ உலகம் தற்போது மாபெரும் சாதனை ஒன்றைப் படைக்கின்றது. இதயத்தை இழப்பவர்கள் அதாவது கடினமான இருதயப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இதனைக் கடையில் வாங்கிப் பொருத்திக்கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை. நொந்து போனவர்களுக்கு இது நெஞ்சில் பால் வார்க்கும் செய்தி அல்லவோ. இதயப் பாதிப்பால் அவதியுறுபவர்கள் இனி இருதய மாற்று சத்திர சிகிச்சை என்றெல்லாம் அடுத்தவர் இதயங்களையோ ஆடுமாடுகளின் இதயத்தையோ தேடி அலையத் தேவையில்லை. இதயம் போலச் செயற்பட வல்ல இயந்திரங்கள் விரைவில் சந்தைக்கு வந்துவிடும்.

அவற்றை நம்பலாமா?

உண்மையான இதயத்திலேயே மனச்சாட்சி கிடைக்கிறதா என்ற சந்தேகம் பலருக்கும் எழுகின்றபோது இந்தக் கடைச்சரக்கு காலைவாரி விடாது என்று ஏன் சந்தேகம் எழக்கூடாது?

ஆண்டு ஒன்றுக்கு சுமார் 35 மில்லியன் (350 இலட்சம்) தடவைகள் இந்த இருதயம் துடிக்கின்றது. என்னதான் தாக்கங்கள் வந்தாலும் திருத்தங்கள் தேவைப்பட்டாலும் அது துடிக்கத் தவறுவதில்லை. அதை ஓர் இயந்திரத்தினால் ஈடுசெய்ய இயலுமா என்பதே கேள்வி.

அபியோமட் (Apiomed) என்ற தொழில்நுட்ப நிறுவனம் இத்தகைய இதயங்களைத் தயாரித்து பரிசீலித்து வருகின்றது. ஒரு துடிப்பைக் கூட மறந்தும் தவற விடாமல் நூறு வரையான இந்தச் செயற்கை இதயங்கள் Apiomed இன் ஆய்வுகூடத்தில் வருடக்கணக்காகத் துடித்துக் கொண்டிருக்கின்றன.

பற்றரியில் இயங்கும் இந்த இதயங்கள் முரண்டு பிடித்து மனிதர்களின் மனங்களை சிதைக்காமல் எலக்ரோனிக் ஆணைக்குக் கட்டுப்பட்டு செயற்பட வல்லன. ஏற்கனவே பற்றரியில் இயங்கும் பல பிளாஸ்ரிக் சாதனங்கள் மனிதர்களின் மனத் தேவைகளை ஈடுசெய்ய போராடிக் கொண்டிருக்கின்றன. தற்போது இதயமும் புறப்பட்டு இருக்கின்றது.

தீவிரமான இருதயப் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கும் ஐந்து நோயாளிகளுக்கு பரீட்சார்த்த அடிப்படையில் விரைவில் இந்த இதயங்கள் பொருத்தப்படவுள்ளன. தொழில்நுட்பப் பிரச்சினைகள், மனிதனின் உடலியல் சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து இவை நெஞ்சிலே எமக்காகத் துடிக்கப்போகின்றன. மின் துண்டிப்பு ஏற்பட்டால் அதோ கதி தான்.

**மு.சிவநேசன்**

பல சந்தேகங்களும் கேள்விக் கணைகளும் கிளம்பியிருக்கின்றன. என்றாலும் இன்றோ நாளையோ மடியப் போகிறவர்களுக்கு இந்த இதயங்கள் சில காலம் தாக்குப் பிடித்து வாழவே வழிசெய்கின்றன. எனவே வரவேற்கலாம். இதுவரை காலமும் இதயமாற்றத்தை வேண்டுபவர் பல வருடங்கள் ஒரு தானம் செய்பவருக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமை இருந்து வந்தது. அவ்வாறு தம்மைப் பதிந்து விட்டுக் காத்திருக்கும் இலட்சக் கணக்கானோரில் நூற்றுக் கணக்கானோரிற்கே உரிய காலத்தில் மாற்றீட்டுக்கான இதயம் சந்திக்கிறது. அமெரிக்காவில் மட்டும் ஆண்டுக்கு மூன்று இலட்சம் பேர் இதயம் கிடைக்காமல் மடிகறார்கள்.

இந்தச் செயற்கை இதயங்கள் பொருத்தப்பட்ட முதலாவது நோயாளி இதயப் பிசகினால் எப்படி மடிவார்? மனித இதயம் படிப்படியாக சமிக்ஞைகளைக் கொடுத்து மருத்துவ வாய்ப்புக்களுக்கு அவகாசம் தந்து பிசகுவதும் உண்டு. திடீரென மாரடைப்பு ஏற்பட்டு காலை வாருவதும் உண்டு. இதில் இயந்திர இதயம் எந்த வகையுடையது?

இந்த செயற்கை இதயம் 180 மில்லியன் தடவைகள் சீராகத் துடிக்கும் என உத்தரவாதம் தரப்பட்டுள்ளது. எனவே பொருத்திக் கொண்டவர் ஐந்து ஆண்டுகள் வரை நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. காதல் இதயம் போல இது ஐந்து நாளில் காலை வாரிவிடுமா என்று பொருத்தியபின் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இதயம் பொருத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஐந்து நோயாளிகளும் மிகவும் சிக்கலான நிலையில் இருக்கிறார்கள். அவர்களின் ஆயுள் ஒரு மாதத்திற்கே தாக்குப்பிடிக்காது என்ற நிலைமையில் அவர்களது வாழ்க்கை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவது வரவேற்கத்தக்கதே. எனவே இதனை சந்தைப்படுத்த வேண்டிய தேவை அத்தியாவசியமானது என்பதனை எவரும் மறுக்க இயலாது. இயற்கை இருதய மாற்று சிகிச்சைக்கு உட்பட்டவர்களும் தொடர்ந்து தினசரி முப்பதிற்கும் மேற்பட்ட குளிகைகளை நம்பியே தமது ஆயுளைக் கழிக்கிறார்கள். எனவே இந்தக் கண்ணாடி இருதயம் பரவாயில்லை என்றே கருதலாம்.

பரீட்சார்த்த அடிப்படையில் இந்த ஐந்து பேருக்கும் பொருத்தப்பட இருக்கும் இதயங்கள் சரிவர சில காலம் இயங்குமானால் அவற்றிற்கான சந்தைப்படுத்தல் அனுமதி வெகு விரைவில் கிடைத்துவிடும். அதன் பின்பு கடைகளில் கண்ணாடி அலுமாரிக்குள் இத்தகைய இதயங்கள் விற்பனைக்குக் காத்திருப்பதைக் காணலாம்.

இந்த இதயத்திற்குத் தேவையான தகவல்கள் நரம்புகளினால் வழங்கப்பட முடியாதவை. எனவே நோயாளியின் இடுப்புப் பட்டியில் பற்றரி, கொயில் மற்றும் சில மின் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இவை உடலினுள் உள்ள அவசர கால பற்றரிக்கும் சில எலக்ரோனிக் கருவிகளுக்கும் இயந்திர இருதயத்திற்கும் தகவல்களை வழங்கும். இது ஒரு வன்பொருள் மென்பொருள் இணைந்த தொழில் நுட்பமே.

வெளியில் இருக்கும் பற்றரியை சார்ச் செய்யும் வேளைகளில் உள்ளே இருக்கும் பற்றரி 30 நிமிடங்கள் வரை தாக்குப்பிடிக்க வல்லது. அத்தோடு வெளியில் பெல்ற்றில் இணைகப்பட்டிருக்கும் பற்றரியும் ஒவ்வொரு நான்கு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை சார்ச் செய்யப்பட்டாக வேண்டும். எனவே நீண்டதூர பயணங்களைத் திட்டமிட்டே மேற்கொணடாக வேண்டும். வழியில் போக்குவரத்து நெரிசலால் தடங்கல் ஏற்பட்டாலே இதயம் நின்று விடும்.

இதயத்தின் உள்ளே இருக்கும் பம்பி தொடர்ச்சியாக சக்தி கிடைக்கும்போது இயங்கும். எனவே அது வரைதான் இந்தச் செயற்கை இதயம் உடல் முழுவதும் இரத்தத்தைக் கொண்டு செலுத்தும். இந்த இதயத்தின் வால்வுகள் துடிக்கும் சத்தம் கூட வெளியே கேட்காது. இதன் சுவரில் மோதுவதனால் இரத்தம் கட்டிபட மாட்டாத வகையில் இது நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மனித உடல் தேவைக்கு ஏற்ப சாதாரண இதயம் இரத்த ஓட்டத்தை அவ்வப்போது அதிகரித்துக் கொடுக்கிறதே. அந்த அளவுக்கு இதனால் ஈடுகொடுக்க இயலாது என்றாலும் உடற் தேவைக்கு ஏற்ப ஓரளவுக்கு



இயந்திர இதயம்

சமாளிக்கும் திறன் இதற்கும் உண்டு. படுக்கையில் இருக்கும் இருதய நோயாளி எழுந்து நடமாடவும் நாளாந்த வாழ்வைச் சந்திக்கவும் இது ஈடுகொடுக்கும். ஆனால் அவரை மைதானத்தில் இறங்கி கால்பந்து விளையாட இது அனுமதிக்கமாட்டாது.

நிமிடம் ஒன்றுக்கு சாதாரணமாக ஐந்து லீற்றர் இரத்தத்தை இது 'பம்' செய்யும். எனவே வழமையான உடல் தேவைகளை ஈடுசெய்ய இது போதுமானதாக இருக்கும். இதன் வேகம் நிமிடத்திற்கு பத்து லீற்றர் வரை இரத்தத்தை 'பம்' செய்யும் வகையில் அதிகரிக்க இடமுண்டு. எனவே நோயாளி தனது பாலியல் நடவடிக்கைகளைக்கூட சற்று அதிகரிக்கலாம்.

இயற்கை இருதயம் போலவே சுவாசப்பைக்கு இரத்தத்தை அனுப்பி சுத்திகரித்து மீளப்பெறவும் அதனை மீண்டும் உடல் நடவடிக்கைகளுக்காகப் 'பம்' பண்ணவும் அதிசயிக்கத்தக்க வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதயத்தின் இயற்கைப் படைப்பையே கண்டு வியக்கும் மனிதன் இந்த ஆய்வுகூடத் தயாரிப்பைக் கண்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

அபியோமட் நிறுவனத்தை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபித்த டேவிற் லெடமன் (David Lederman) இன்று இந்தச் செயற்கை இதயத்தைப் பெருமையுடன் கையில் தாங்கி நிற்கிறார். அதன் விலையோ தற்போது 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஆகின்றது. காலப்போக்கில் இதன் விலை 25 ஆயிரமாகக் குறையக்கூடும் தவிர சாதாரண இதய மாற்று சத்திர சிகிச்சை போன்றே இதற்கும் பெருமெடுப்பிலான வைத்திய வசதிகளும் பொருளசெலவும் தேவைப்படும். எனவே இதுவும் வசதி வாய்த்தவர்களுக்கான ஒரு வரப்பிரசாதமே அன்றி வேறில்லை.

### புலிகளின் லண்டன் பொறுப்பாளர் தெரிவிப்பு

# அரசுடன் தற்போது பேசுவது குழப்பத்தையே ஏற்படுத்தும்

## அமையவிருக்கும் புதிய அரசுடன் பேசுவோம் என்கிறார் அவர்

லண்டன்,ஜூலை11

இலங்கை அரசியலில் தற்போது பெருங்குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசுடன் இப்போது பேசுவது என்பது மேலும் குழப்பத்தையே ஏற்படுத்தும் இதனால் இனி அமையவிருக்கும் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் லண்டன் கிளைப் பொறுப்பாளர் சாந்தன்.

லண்டன் வெம்பிளி அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்துப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கமளிக்க இருந்தார், எனினும், சுகயீனம் காரணமாக அவர் இதில் கலந்துகொள்ளவில்லை. எனவே புலிகளின் மேற்படி நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு அவர் என்னிடம் கூறியிருந்தார்.

புலிகள் என்றுமே சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்லர். நாம் சமாதானத்துக்கும் தயாராக இருக்கின்றோம் என்பதை அண்மைக் காலமாக அரசியல் களத்திலும், யுத்தக் களத்திலும் நாம் காட்டி வரும் பொறுமை நன்கு தெளிவுபடுத்தும்.

- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# வலி.மேற்கு விவசாய நிலங்கள் உவர்ப்பிரதேசமாக மாறுகின்றன

## விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

வலி.மேற்கு,ஜூலை11

அராலி மேற்கில் உள்ள விவசாய நிலப் பகுதிகள் உவர்ப்பிரதேசமாக மாறி வருகின்றன. இதனால் அந்தப் பகுதியில் கடந்த பெரும்போகத்தின் போது நெல் விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

- இவ்வாறு வலிகாமம் மேற்கு விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. விவசாயக் குழுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நெல் விளைச்சல் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது அராலி மேற்கு கற்கனிக்குளத்தைச் சுற்றியுள்ள வயல் நிலங்கள் உவர்ப் பிரதேசமாக மாற்றம் அடைந்து வருவதாகவும் -

இதனால் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு நெல் விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும்-

விவசாயிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து விவசாய நிலம் உவர் நிலமாக மாற்றமடைவதைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளை மேற்கொள்வது என்றும்-

இதற்கான காரணத்தைக் கண்டறிய முயற்சியில் ஈடுபடுவது என்றும் - கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-175)

### வலி.மேற்கு பிரதேசத்தில் உள்ள

# 'மைற்' நோய் தாக்கிய தென்னைகளின் விவரங்களைப் பதியுமாறு அறிவுறுத்து

வலி.மேற்கு,ஜூலை11

'மைற்' நோயினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் விவரங்களை கிராம உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்துமாறு பொதுமக்களுக்கு வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப்பிரதேசத்தில் உள்ள பெருந்தொகையான தென்னை மரங்கள் 'மைற்' நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தென்னை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு இலவசமாக மருந்து தெளிப்பதற்கு தமது திணைக்களம் முடிவு செய்துள்ளதாகவும் -

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகப் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் விவரங்களைத் தந்துதவுமாறும் - குறிப்பிட்டார்.

இதனை அடுத்தே பிரதேச செயலர் இந்த அறிவித்தலைவிடுத்துள்ளார். (ம-175)

# சத்துணவுத் திட்டத்துக்குத் தெரிவான மாணவர் எண்ணிக்கை குறித்து விசனம்

## அதிபர்கள் பிரதேச செயலருக்கு முறையீடு

மூளாய்,ஜூலை11

பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக வலிகாமம் மேற்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்று பாடசாலை அதிபர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சத்துணவு பெறுவதற்குத் தகுதியுடைய பல மாணவர்கள் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்றும் -

பல பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் எவருமே சேர்த்துக் கொள்ளப்படாமல் தவறவிடப்பட்டுள்ளனர் என்றும் -

அதிபர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேற்படி திட்டத்துக்காக வலி.மேற்கில் இருந்து 388 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். எனினும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு தகுதியான மேலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அப்பகுதியில் உள்ளனர் என்று அதிபர்கள் கூறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அதிபர்கள் பலரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் வலி.மேற்குப் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

திட்டத்தின் பிரமாணங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய மேலும் ஒரு தொகுதி மாணவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து தயாராக வைத்திருக்கும் படி பிரதேச செயலர் ஆலோசனை வழங்கியுள்ளார். (க-99)

## நூலகங்களுக்கு நூல்கள்

வலி.தெற்கு,ஜூலை11

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சுன்னாகம், ஏழாலை, உடுவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது நூலகங்களுக்குத் தேவையான நூல்களும், தளபாடங்களும் பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வழங்கப்படவுள்ளன.

மேற்படி மூன்று பொது நூலகங்களுக்கும் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களைக் கொள்வனவு செய்யவும் -

சுன்னாகம் பொது நூலகத்துக்கு 40 புதிய கதிரைகளைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-152)

## நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை

வலி.மேற்கு,ஜூலை11

வலி.மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் கடமையாற்றும் 19 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு நியமனம் செய்யப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுள், மற்றைய பிரதேசங்களில் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளன. எனினும் ஆறுமாதங்களுக்கு மேலாகக் கடமையாற்றும் இந்த உத்தியோகத்தர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. (ம-175)

## பெரியபுராண பூர்த்தி விழா

வலி.வடக்கு,ஜூலை11

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் பெரிய புராண படனம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள பெரிய புராண படிப்பு வெள்ளானைச் சருக்கத்துடன் பூர்த்தியடைகின்றது.

இதனைத் தொடர்ந்து பெரிய புராண படன நிகழ்வில் கலந்து கொண்ட பௌராணிகர்கள் ஆன சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், சிவத்திரு சி.சண்முகவடிவேல் ஐயர், சிவத்திரு சி.ஈஸ்வரதாஸ் ஐயர், ஆசிரியர் சு.விஸ்வநாதர் ஆகியோருக்கான பாராட்டுவைபவமும் இடம்பெறவுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக ஆலயத்தில் பெரிய புராண படனம் இடம்பெற்று வந்தது. நாளை அதன் பூர்த்தியை முன்னிட்டு நண்பகல் 11.30 மணிக்கு பெரிய புராண பூர்த்தி பூஜையும் அதனைத் தொடர்ந்து பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (ம-86)

### இன்றைய சூழ்நிலையில்

# எம்.பி. ஒருவரின் விலை 5 கோடி வரை உயரும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை11

"இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் விலை 5கோடியாக உயரலாம்."

ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை குருநாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுத்துக்கொள்வதற்காக பிரதான கட்சிகள் பேரம் பேசி வருகின்றன. கடந்த வெள்ளி வரை ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் விலை 3கோடியாக இருந்தது. இன்றைய சூழ்நிலையில் அது 5 கோடியாக உயர்ந்துவிடலாம்.

ஆனால் ஜே.வி.பி. பணத்துக்கோ, பதவிக்கோ ஒருபோதும் அடிபணிந்து விடாது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வார்த்தைகளுக்கோ ரணில் விக்கிரமசிங்கவின் ஆசை வார்த்தைகளுக்கோ மயங்கிவிட்போவதில்லை.

- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### ஆறுமுகம் தொண்டமான் சொல்கிறார்

# அரசைக் கவிழ்க்க ஒருபோதும் இ.தொ.கா. துணைபோகாது

## புதிய அரசு அமைந்தால் அதற்கும் ஆதரவு

கொழும்பு,ஜூலை11

ஆட்சியைக் கவிழ்க்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் துணை போகமாட்டாது. எனினும் பின்னர் ஆட்சிக்கு வரும் எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக ரீதியில் பதவிக்கு வரும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி மலையக மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்பதே தொண்டமானின் அரசியல் சாணக்கியமாக இருந்தது.

அந்த வழியிலேயே இ.தொ.கா.வும் தனது பணிகளை முன்னெடுத்துச் செல்லுமேதவிர ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஒருபோதும் துணை போகாது.

ஜனநாயக ரீதியில் பதவிக்கு வந்து ஆட்சி செய்யும் அரசாங்கத்துக்கு எமது பூரண ஆதரவை வழங்குவதன் மூலம் எமது மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் நாம் சேவை செய்ய முடியும்.

தொண்டமான், அரசியல் சாணக்கியத்தோடு செயற்பட்டுள்ளார். அவரின் வழியில் எமது பணியைத் தொடர்வோம். மலையக மக்கள் ஒற்றுமையுடன் சிந்தித்து செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தை மேம்பாடடையச் செய்ய முடியும்.

- என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)



**யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் வடமராட்சி உப கிளை நடத்திய முன்பள்ளி பயிற்சி நெறியை முடித்து வெளியேறுவோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.**

**யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம-173)**

# தொடர்புகொள்ளக் கோரிக்கை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் பின்வருவோரை உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டோரின் விவரம் வருமாறு:-

துரைராஜா பாக்கியராஜா (18, புங்கன்குளம் வீதி, அரியாலை), நாகராஜா பவானி அல்லது நிரேந்திரன் பவானி (பிள்ளையார் கோயிலடி, இணுவில் கிழக்கு), சடையன் சின்னத்தம்பி (கைதடி மத்தி, கைதடி), தவேந்திரராஜா விமலாதேவி (பெரியகுளம் சந்தி, சாவகச்சேரி),

நவநீதராஜா யோகேஸ்வரி (மட்டுவில் தெற்கு - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்),க.வேலுப்பிள்ளை (மே/பா வே.குலானந்திராசா (முத்ததம்பி வீதி, மானிப்பாய்), ஐ.கோபாலகிருஷ்ணன் (பாலா கராஜ், டச்சு வீதி, சாவகச்சேரி - முருகமூர்த்தி கோயிலடி, நவாலி கிழக்கு),

க.சத்தியதேவி (கைதடி கிழக்கு -மே/பா கோவிந்தசாமி, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி), வை.சுப்பிரமணியம் குமரநகர், கைதடி - மஞ்சவண்ணா வைரவர் கோயில், புத்தூர்), ஐ.வேலுப்பிள்ளை (கைதடி தெற்கு- சந்திரோதயா பாடசாலை உரும்பிராய்). (ம-7)

## மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

சிறுப்பிட்டி வடக்கு கலைவாணி சனசமூக நிலையம் நடத்தும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ம-4)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-4)

# பருத்தித்துறை பஸ் நிலையத்தில் மலகூடம் அமைக்கும் பணி நிறுத்தம்

வடமராட்சி, ஜுலை11

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் மலகூடம் அமைப்பதற்குப் பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மலகூடம் அமைக்கும் திட்டம கைவிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சேபம் தெரிவித்த வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நகரசபை உபதலைவர் ந.மணிவண்ணன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தங்களது கோரிக்கையைக் கவனத்துக்கு எடுத்து மலகூடம் அமைக்கும் திட்டம் தற்காலிகமாகக் கைவிடப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-173)


உ

யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை

நூற்றாண்டு விழா

பரிசளிப்பு நிகழ்வும் – நிறுவுநர் நினைவும்

காலம்:- இன்று(11-07-2001) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி

இடம்:- பாடசாலை மண்டபம்

தலைவர்:- திரு.சு.சண்முககுலகுமாரன் B.A. (அதிபர்)

பிரதம விருந்தினர்:- உயர்திரு.அ.தற்பரானந்தன் J.P. (உதவிக்கல்விப் பணிப்பாளர், உடுவில்).

சிறப்பு விருந்தினர்:- உயர்திரு.வி.ஆ.இராமச்சந்திரன் (ஆசிரிய ஆலோசகர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/17347) —பாடசாலைக் குடும்பம்.



**வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு**

*வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை*

**(RRAN)**

வடக்கில் அரச பாடசாலைகளில் கல்விகற்கும் இடம்பெயர்ந்த, க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

வடக்கில் அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் இடம்பெயர்ந்த க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஒன்று வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினரால் எதிர்வரும் 15-07-2001 தொடக்கம் அமுல்படுத்தப் படுகிறது.

தகைமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 500/- வீதம் அவர்கள் முதன் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரையில் ஆகக் கூடியது 27 மாதங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப் படும்.

விண்ணப்பதாரிகள் தமது பாரம்பரிய வதிவிடத்திலிருந்து கலவரங்கள் காரணமாகவோ அல்லது பாதுகாப்புப் படையின் நடவடிக்கைகள் காரணமாகவோ அல்லது ஆயுதபாணிகளால் எடுக்கப்பட்ட வேறேதும் நடவடிக்கைகள் காரணமாகவோ இடம்பெயர்ந்த மாணவர்களாக இருத்தல் வேண்டும் அத்துடன்:

1. வடமாகாணத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் நலன் புரிநிலையங்களில் தற்போது வதிபவர்களாகவும் அல்லது நண்பர்கள், உறவினர்களுடன் வாழ்ந்து கொண்டு உலர்உணவு பெறுபவர்களாகவும்,
2. விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ/த) வகுப்பில் (வருடம் 12) சேரும் முதல் வருடத்தில் மே மாதம் 1ஆம் திகதிக்கு 18 வயதிற்கு மேற்படாதவர்களாகவும்,
3. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரேதடவையில் தமிழ் அல்லது சிங்களத்திலும், கணிதத்திலும் சாதாரணசித்தியும், குறைந்தது ஆறு (6) பாடங்களில் திறமைச்சித்தி எய்தியவர்களாகவும்,
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரால் அனுமதிக்கப்பட்ட அரச பாடசாலைகளில் உள்ள உயர்தர வகுப்புகளில் பயிலும் மாணவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
5. 1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், தற்போது க.பொ.த. (உ/த) வகுப்பில் (வருடம் 13) கல்வி பயின்று கொண்டிருப்பவர்களும் க.பொ.த (உ/த) முதலாம் வருட (வருடம் 12) மாணவர்களும் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்.
6. அரச அனுசரணையுடன் வழங்கப்படும் வேறு எந்தவொரு புலமைப் பரிசில் பெறுபவர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களல்லர்.

விண்ணப்பப்படிவங்களுக்கான கோரிக்கைகள், அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேசச் செயலாளர் காரியாலயங்களுக்கும், வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை அலுவலகங்களுக்கும் தமது தகைமைகளைக் குறிப்பிட்டு, முத்திரை ஒட்டப்பட்டு சுயவிலாசமிடப்பட்ட (23செ.மீ X 10செ.மீ) கடித உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

தலைவர்,
வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை,
3ஆவது மாடி,
இல.14, பி.ஓ.ஐ கட்டடம்,
சேர் பாரோன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு - 01

விண்ணப்பப்படிவங்கள் கோரி அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 15.08.2001 ஆகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித் திகதி 30.09.20001ஆகும்.

என்.வாமதேவா,
தலைவர்,
ஆர்.ஆர்.ஏ.என். (C/17350)


## நெடுந்தீவில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை11

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் டி.எஸ்.டி முன்னேற்ற வெளிப்படுத்துகை வாரத்தில் இன்று காலை 8.30 மணிக்கு "வழிபட வேண்டியோரை வழிபடுவோம்" என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெறும்.

தென்னிந்தியத் திருச்சபையின் நெடுந்தீவு பங்கு வண.போதகர் ஜே. ஆனந்தராஜன், நெடுந்தீவுப் பகுதிக்கான கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

நாளை வியாழக்கிழமை ஆங்கில நூல் கண்காட்சி, வங்கிக் கணக்கு ஆரம்பித்தல் என்பன இடம்பெறும்.

(ம-7)

# பருத்தித்துறையில் முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கு ரூ.5 லட்சம் ஒதுக்கீடு

வடமராட்சி,ஜுலை11

பருத்தித்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு செலவுத் திட்டத்தில் இருந்து 5லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தும்பளை உதயசூரியன் முன்பள்ளி அபிவிருத்திக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் -

புலோலி கூவில் தீபஜோதி முன்பள்ளிக்கு கட்டடம் அமைக்க ஒன்றரை லட்சம் ரூபாவும்-

பருத்தித்துறை சுப்பர் மடம் சித்தி விநாயகர் முன்பள்ளி, கற்கோவளம் முன்பள்ளி, அல்வாய் நக்கீரன் முன்பள்ளி ஆகியவற்றுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யவென தலா இரண்டு லட்சம் ரூபாவும-

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் அபிவிருத்தி தொடர்பாகப் பருத்தித்துறைப் பிரதேச முனபள்ளிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் புலோலி பொது நூல் நிலையத்தில் நடைபெற்றது. பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

(ம-173)

# சமாதான முயற்சிகள் ஸ்தம்பிக்க....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகாவின் அரசு 1995இல் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முனைந்தபோது, இவ்வாறான தோல்விகள் தொடர்ந்து இடம்பெற்றதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதிக்கு (சந்திரிகாவுக்கு) மிக நெருங்கியவர்களே ஜனாதிபதியால் அரச தரப்புப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஒரு சில அரச அதிகாரிகளும் அடங்கியிருந்தனர். அந்த அரச அதிகாரிகளிடமிருந்து சுதந்திர உணர்வுகள் பிரதிநிதி குழுவில் இருந்த - ஜனாதிபதிக்கு நெருங்கிய - ஏனைய பிரதிநிதிகளால் மழுங்கடிக்கப்பட்டன. அந்த சமாதானத் தூதுக் குழுவினர் சமாதானத்தை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்துத தீவிரமாகச் சிந்திக்கவுமில்லை; கருத்துக்களைப் பரிமாறவுமில்லை.

சமாதானப் பேச்சு மேசையில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்களின் காரண காரியங்களை அரசு உரிய முறையில் தயாரிக்கவில்லை. இந்தக் காரணத்தால், பேச்சுக்கள் முறியப்போகும் தறுவாயில் பொது மக்களில் இருந்து இரு சமாதானப் பிரதிநிதிகளை அந்த சமாதானக் குழுவில் சேர்க்கவேண்டிய சூழ்நிலை அரசுக்கு உருவானது. இருப்பினும் ஏற்கனவே பாதிப்படைந்திருந்த சமாதான முயற்சிகளை புதிய பிரதிநிதிகளால் நேர்சீர் செய்யமுடியவில்லை. அன்று சந்திரிகாவின் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்திய சமாதானக் குழுப பிரதிநிதிகளில் இன்று ஜனாதிபதியுடன் இருப்பவர்கள் அரச அதிகாரிகள் மட்டுமே. ஏனையவர்கள் சந்திரிகாவின அரசியல் செயற்பாடுகளை வெறுத்து தூரச் சென்றுவிட்டனர்.

இருபது ஆண்டுகளாக யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இரு தரப்பினருக்கிடையே, சமாதான முயற்சிகள் தொடர்பான ஏற்பாட்டாளர் பாத்திரத்தை ஏற்று நடிப்பது என்பது 32 பற்களுக்கிடையே அமைந்துள்ள நாக்கை ஒத்ததாகும். பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும். ஆனால் மிகவும் அவதானத்துடன் பேசப்படவேண்டும். சமாதான ஏற்பாட்டாளராகப் பகிரங்கமாக வந்த முதல் சந்தர்ப்பத்தில் அதாவது 2000 நவம்பர் முதலாம் திகதி பிரபாகரனைச் சந்தித்த சொல்ஹெய்ம் பின்வருமாறு தெரிவித்தார்:-

*"இரு நிபந்தனைகளுடனேயே அரசியல் தீர்வினை உருவாக்க முடியும். அதாவது சிறிலங்காவில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (இதுவே தற்போது சர்வதேச சமூகத்தின் கருத்துமாகும்). சிறிலங்காவில் தனியான இராச்சியம் (தமிழீழம்) அமைக்க வாய்ப்புக்கள் இல்லை"*

சொல்ஹெய்ம் ஆரம்பத்திலேயே மிகவும் தெளிவாகக் கூறினார். மேற்படி கருத்தானது தனது சொந்தக் கருத்து மாத்திரமன்றி அதுவே சர்வதேச சமூகத்தின் கருத்தும் எனத் தெரிவித்தார். எனவே சொல்ஹெய்ம் ஆரம்பத்தில் இருந்தே நேர்வே சமாதானத்தூதுவர் என்பதிலும் பார்க்க, சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாகவே செயற்பட்டார் என்றே கூறவேண்டும். இந்தியாவில் இருந்து அமெரிக்கா வரை அவரது கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அமெரிக்கா சென்ற சொல்ஹெய்ம் போர் நிறுத்தத்தை இருதரப்பினரும் கடைப்பிடிக்கவேண்டும் என அழுத்தம் கொடுக்கப்படவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்த காரணத்தாலேயே சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுக்களிலிருந்து அவரை ஒதுக்கிவைக்கத் தீர்மானித்தது எனக கூறப்படுகிறது. சொல்ஹெய்மின் பாத்திரத்தை வானுயரப் புகழ்ந்த வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த மே மாதம் 10ஆம் திகதி "அவரது அயராத முயற்சிகளுக்கு (சொல்ஹெய்மின்) சிறிலங்கா அரசு மிகுந்த கௌரவத்தை அளிக்கிறது" எனத் தெரிவித்தார். ஆனால் மே மாத இறுதியின்போது அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. (இந்த நிலைபாடானது 1995இல் சந்திரிகா அரசு தனது சமாதானக்குழுப் பிரதிநிதிகளை விரட்டியடித்த சம்பவத்திற்கு ஒப்பானதாகும்). இதுதான் பிரச்சினை. 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி பிரபாகரனைச் சந்தித்து சர்வதேச சமூகத்தின் சார்பில் தோன்றவும், கருத்துவெளியிடவும் சொல்ஹெய்முக்கு உரிமை உண்டெனில் 2001ஆம் ஆண்டு மே மாத இறுதியில் அமெரிக்கா சென்று கருத்து வெளியிட அவருக்கு உரிமையில்லையா?

சிறிலங்காவில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முக்கிய தரப்பாக சர்வதேச சமூகம் உருவாகியுள்ள இவ்வேளையில் சமாதான முயற்சிகளில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களை விடுவிக்கப் பொருத்தமான பாத்திரம் சர்வதேச சமூகத்திற்கு இல்லாமல் போய்விட்டது எனக் கூறலாமா?

எரிக் சொல்ஹெய்ம் தொடர்பாக தற்போது உருவாகியுள்ள பிரச்சினை அவரது சொந்த வாழ்க்கை தொடர்பானது அல்ல. சமாதான நடவடிக்கைகளில் மூன்றாம் தரப்பாக - ஏற்பாட்டாளராக - ஏற்றுக்கொண்ட பாத்திரம் தொடர்பான பிரச்சினையேயாகும். யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினர்களான சிறிலங்கா அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் எந்தவித விருப்போ, நம்பிக்கையோ இல்லை. இந்த வெற்றிடத்தை (நம்பிக்கை, விருப்பு) நிரப்பக்கூடிய ஆற்றல்மிகு சக்திகள் தமிழ் சமூகத்திலோ அல்லது சிங்கள சமூகத்திலோ செயலளவில் இல்லை. இவ்வாறான நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய மிகப் பொருத்தமான - ஏற்றுக்கொள்ளக்கூடிய - மத்தியஸ்தத்தை வகிக்கக் கூடியது சர்வதேச சமூகமே ஆகும். விரும்பினாலும் விரும்பாவிடினும் நாம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். சொல்ஹெய்மை ஓரங்கட்டியதன் மூலம் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் இந்த மூன்றாம் தரப்பு என்ற பாத்திரத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தியுள்ளது. அந்தப் பாத்திரத்தின் மீது அவநம்பிக்கை கொண்டுள்ளது. இத்தகைய நிலைமைகள் அமைதியான அரசியல் தீர்வினைக் காண்பதற்கான பொருத்தமான - சாதகமான- சூழ் நிலைகளை உருவாக்கமாட்டா.

சமாதானத்தை உருவாக்குவதில் முக்கியமான பொறுப்பு அரசாங்கத்தினுடையது. இந்தப் பொறுப்பைத் தட்டிக்கழிக்க அரசு எந்தவொரு காரணத்தையும் கூறமுடியாது. அரச வன்முறைகள் மற்றும் ஆட்சி அதிகாரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது அரசாங்கமே. அப்படியான ஓர் அரசு சமாதான முயற்சிகளை முடக்குமாயின் - இன்றியமையாத ஏதுவான மூன்றாம் தரப்பு மீதான நம்பிக்கை மீது சந்தேகம் கொள்ளுமாயின் - சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என நாம் எவ்வாறு நம்ப முடியும்?

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும், பேச்சுக்களை மேற்கொண்டே தீர்வினைக் காணமுடியுமே தவிர வேறு வழிகளில் இந்நாட்டில் சமாதானத்தை உருவாக்கமுடியாது என்பதை இன்று உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வாறான பேச்சு மூலம் இந்நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப தற்போதைய சர்வதேச நிலைமைகள் பெரிய அளவில் பின்பலமாக அமைந்துள்ளன. அமெரிக்காவில் இருந்து இந்தியாவரையும், ரஷ்யாவில் இருந்து ஜப்பான் வரையும் இதற்கான ஒத்துழைப்பை சிறிலங்கா அரசுக்கு வழங்கத் தயாராய் உள்ளன. ஆனால் அரசோ சிக்கித் தவிக்கிறது. துரதிஷ்டவசமாக அரசுக்கு ஆர்வமோ, அரசியல் அர்ப்பணிப்போ, சமாதான தரிசனமோ இல்லை. நிறைவேற்று ஜனாதிபதி பதவியால் உருவான மனோபாவம் மற்றும் நாளாந்த அரசியலுக்குப் பொருத்தமான குறுகிய காலத்திட்டம் ஆகியனவற்றின் அடிப்படையிலேயே அரசு ஏனைய விடயங்களில் கடைப்பிடிக்கும் போக்கையே சமாதான முயற்சிகளிலும் கடைப்பிடித்து வருகிறது.

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் யதார்த்தமான முன்னேற்றத்தை உருவாக்க முடியாது.

★


உ

விநாயகர் துணை

புதுக்கடைத் திறப்புவிழா

அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 27ஆம் நாள் இன்று(11-07-2001) புதன்கிழமை காலை 6-00 மணி தொடக்கம் 9-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

அபிநயா ஜுவலர்ஸ்

என்னும் புதிய வியாபார ஸ்தாபனத்தை விநாயகர் திருவருள் துணை கொண்டு ஆரம்பித்து வைக்கின்றோம். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். திரு.திருமதி த.சண்முகராசா (வேலணை)

(9968)

# மண்ணைப் பேணுவோம்!

அதிகரித்துச் செல்கின்ற சனத்தொகைக்கேற்ப உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்குப் பயிர் உற்பத்தி இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் அந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக உற்பத்தித் திறனைப் பெருக்குகின்ற நோக்கத்தில் பல விவசாய முயற்சிகள் மேற்கொளளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பயிர்விளைவை அதிகரிப்பதில் செயற்கை உரங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுவந்தன. இந்தச் செயற்கை உரங்கள் பயிருணவாகப் பயன்படும் மூலகங்களை செறிவாக்கப்பட்ட நிலையில் கொண்டுள்ளன. இதனால் அதிகஅளவில் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகக் குறைந்த அளவில் செயற்கை உரங்களைப் பாவிப்பது விவசாயிகளிற்கு ஒரு வகையில் இலகுவான காரியமாகிறது. இதைத் தவிர செயற்கை உரங்களை இலகுவாக விற்பனை நிலையங்களினூடா கப் பெறமுடிகிறது. பயிர்களிற்கு இடப்பட்டதுமே இச்செயற்கை உரங்கள் இலகுவாகப் பயிர்களினால் உள்ளெடுக்கப்படுகின்றன. இத்தகைய நன்மைகளை செயற்கை உரம் கொண்டிருந்தமையால் விளைச்சலை விரைவாக அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கங்களினால் கூட உரம் மானியமாக வழங்கப்பட்டது. இத்தகைய முயற்சியால் 1960 தொடக்கம் 1993 வரை நெல் உற்பத்தி அதிகரித்தே வந்துள்ளது. ஆனால் 1993இற்குப் பின்னர் நெல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படவில்லை.

மேற்படி அவதானத்திற்கு மண்ணின் வளம் குறைந்தமை ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனினும் இது ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயம்.

கடந்த ஏழு, எட்டு வருடங்களாக யாழ்குடாநாட்டு விவசாயிகள் - குறிபாக மேட்டுநில விவசாயிகள் - அவர்களால் எதிர்பார்க்கப்படுகின்ற விளைச்சலைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். இதற்கான பிரதான காரணம் பயிர்களில் காணப்படும் நோய்த் தாக்கங்களாகும். இது பெரும்பாலும் ஒட்டுண்ணித்தாக்கம் எனக் கருதப்பட்டு உரிய திணைக்களங்களின் சிபார்சுகளிற்கமைய கட்டுப்பாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நோயின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. இதனால் பயிர்களின் இத்தகைய நோய்களிற்கும் கூட மண்ணின் வளக்குறைபாடு ஒரு காரணியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### மண் பரிசோதனை நிலையம்

இத்தகைய ஒரு பின்னணியில் தான் யாழ்குடாநாட்டிற்கு ஒரு மண் பரிசோதனை நிலையம் நிறுவப்பட வேண்டும் என விவசாய அமைப்புகள், பல்கலைக்கழகம், விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் போன்ற நிறுவனங்களால் சம்பந்தப்பட்ட மட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மண்பரிசோதனை நிலையம் ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்ற இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு விவசாயியும், பொது அமைப்புக்களும் தனிப்பட்ட முறையில் குடாநாட்டின் ஒப்பற்ற செல்வமாகிய விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு அவர்கள் எத்தகைய முறைகளில் விவசாய நிலங்கள் சீரழிகின்றன என்பதை அறிவார்களாயின் அவற்றைப் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்கக் கூடியவர்களாக இருப்பர்.

***1. மண்ணரிப்பு:-***

மண்துணிக்கைகள், நீர், காற்று என்பவற்றால் ஓர் இடத்தில் இருந்து அள்ளிச் செல்லப்படுகின்ற நிகழ்வையே மண்ணரிப்பு என்கின்றோம். நீரினால் மண்ணரிப்பு ஏற்படுதல் சமனற்ற நிலங்களில் அதிகமாகக் காணப்படும். காற்றினால் ஏற்படுகின்ற மண்ணரிப்பு நிலத்தை மூடியுள்ள தாவரங்கள் குறைவாக உள்ள போது அதிகமாகவும், கூடுதலாக உள்ள போது குறைவாகவும் காணபபடும்.

சமனற்ற தரைகளில் நீரினால் அள்ளிச் செல்லப்படும் மண் வாய்க்கால், குளம் என்பவற்றில் படிவடைகின்றன. இதனால் கால ஓட்டத்தில் இவ்வாய்க்கால்கள், குளங்கள் என்பன நிரவப்பட்டு விடுகின்றன. குளங்களின் ஆழம் குறைக்கப்படுவதால் மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுடன் குளங்களால் கொள்ளப்படுகின்ற நீரின் அளவும் குறைகின்றது. இது வரட்சிக்கு இட்டுச் செல்கிறது.

காற்றினால், வளமான மண்படை அள்ளிச் செல்லப்படுகின்றமையால் அதில் உள்ள பயிருணவும் அள்ளிச் செல்லப்படுகிறது. இதனால் மண்ணரிப்பிற்குட்பட்ட நிலப்பரப்பில் பயிரினங்கள் செழித்துவளர முடியாத நிலை தோன்றுகிறது.

இங்கு வல்லைக் கடல் நீர் ஏரியை அண்டிய விவசாய நிலங்களில் மண்ணரிப்பினால் ஏற்படுகின்ற பாதிப்பை ஒரு மாறுபட்ட முறையில் காணலாம். மழைகாலங்களில் வல்லைப் பிரதேச ஏரியில் நீர் தேங்குகின்றது. இது கடலுடன் தொடுகையடைவதால் கடலில் உள்ள உவர் நீர் இந்த ஏரியில் கலக்கிறது. கோடைகாலத்தில் நீர் வற்றும்போது ஏரிப்பிரதேசத்து உவர்மண் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு விவசாய நிலங்களில் இடப்படுகின்றது (தவிர ஏரியில் நீர் மட்டம் அதிகரிக்கின்ற மாரிகாலங்களில் உவர் நீர் நேரடியாக வயல் நிலங்களில் தேங்குகின்றது). இதனால் வயல்நிலங்கள் யாவும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலங்களாக மாறிவருகின்றன.

வல்லையின் குறிப்பிட்ட சிறு பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது போன்ற வலைவளர்ப்பு முறை, அவரை இனத்தாவரங்களை விவசாய நிலங்களில் மூடுபயிர்களாக வளர்த்தல், ஓலை, இலை, வைக்கோல் என்பவற்றை தரையை மூடி இடல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்தலாம்.

### கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயபரஸ்ரீ

***2. பயிருணவு இழப்பு:-***

பயிர்களின் உற்பத்திக்காக விவசாயிகளால் பயிருணவானது பசளையாக இடப்படுகிறது. இப்பயிருணவு பயிர்வளரும் போது அதன் விருத்திக்கும், உணவுப் பொருள் உருவாக்கத்திற்குமாக பயிர்களால் உறிஞ்சப்படுகிறது. உற்பத்திப் பொருளும், பயிர் மீதங்களும் விவசாயிகளால் விளை நிலத்தில் இருந்து சந்தைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் பெருமளவு பயிருணவானது விளைநிலங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படுகிறது. இவ்வாறாக ஆண்டு முழுவதும் செறிவு முறையில் பயிர் செய்யப்படும் நிலத்தில் இருந்து 600kg - 900kg பயிருணவு அகற்றப்படுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன.


பயிர்ச்செய்கை நிலங்களில் பசளைகள் இடப்படுகின்ற போதிலும் இடப்படுகின்ற பயிருணவை விட அகற்றப்படுகின்ற பயிருணவின் அளவு அதிகமாகும். இதனால் தொடர்ந்து மண்ணில் பயிருணவின் அளவு அதிகமாகும். இதனால் தொடர்ந்து மண்ணில் பயிருணவின் அளவு குறைந்து அதன் வளமும் குறைகின்றது.

தற்போது பெரும்பாலான விவசாயிகள் தனிப் பயிர்ச் செய்கையையே மேற்கொள்கின்றனர். இதனால் பயிர்கள் குறித்த சிலவகைப் பயிருணவை அதிகம் உட்கொள்கின்றன. மண்ணில் உள்ள பயிருணவுகளின் சமநிலை இதனால் குழப்பமடைகின்றது.

| பயிர் | பயன்படுத்தும் பயிருணவு (Kg) | | |
|---|---|---|---|
| | நைதரசன் | பொசுபரசு | பொட்டாசியம் |
| நெல் | 20 | 11 | 30 |
| நிலக்கடலை | 58 | 20 | 30 |
| வாழை | 08 | 03 | 32 |
| மரவெள்ளி | 08 | 01 | 05 |

(ஒரு தொன் விளைபொருளின் உற்பத்திக்குப் பயன்படும் பயிருணவின் அளவு)

விளைபொருள்களைத் தவிர பயிர் மீதங்களை மீண்டும் தரைக்கு இடுவதன் மூலமும், போதிய சேதனப் பொருள்களைப் பசளையாகப் பயன்படுத்துவதன் மூலமும் பயிருணவு இழப்பைத் தடுக்கலாம். தானியப்பயிர், கிழங்குப்பயிர், அவரை இனப்பயிர் என்பவற்றை சுழற்சி முறையில் செய்கை பண்ணும் போது மண்ணில் பயிருணவுப் பொருள்களின் சமநிலை பேணப்படலாம்.




***3. களர், உவர் தன்மை அடைதல்:-***

களர் தன்மையையும், உவர் தன்மையையும் ஏற்படுத்துகின்ற நிகழ்வுகள் ஒத்ததாக இருப்பினும் களர்தன்மையும், உவர் தன்மையும் வேறானவை. மண்ணில் கல்சியம், மக்னீசியம், சோடியம் என்பவற்றின் சல்பேற்று, குளோறைட்டு உப்புக்களின் அளவு அதிகரிப்பதனால் மண் களர் தன்மையை அடைகிறது.

உவர்தன்மை ஏற்படுவதற்கு சோடியம் காபனேற்றினதும், சோடியம் இருகாபனேற்றினதும் அளவு மண்ணில் அதிகரிப்பதே காரணமாகும்.

கனியுப்புச் செறிவு கூடுதலான நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல், மண்ணின் கீழ்ப்பகுதியில் உள்ள கனியுப்புக்கள் நீரிற் கரைந்து மயிர்த்துளை நீருடன் மண்ணின் மேற்பகுதியை அடைதல் போன்ற நிகழ்வுகளால் மண் உவர், களர் தன்மையைப் பெறுகின்றது. யாழ்ப்பாண மேட்டு நில பயிர்ச்செய்கையில் இந்த நிகழ்வு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது.

விவசாய நிலங்கள் களர், உவர் தன்மையை அடைவதால் பயிரின் வளர்ச்சியானது பாதிக்கப்படுகின்றது, வேரினால் உறிஞ்சப்படுகின்ற நீரின் அளவு குறைந்து பயிர் வாடல் அடைகிறது. மேலதிகமான குளோறைட்டுகள், காபனேற்றுகள், சல்பேற்றுக்கள் தாவரத்திற்கு நச்சுத் தன்மையை ஏற்படுத்துகின்றன. மண்ணில் காணப்படும் நைதரசன் பதிக்கும் பக்ரீறியாக்கள் இறக்கின்றன. மண்ணின் கட்டமைப்பு பாதிக்கப்படுகிறது. இதனால் காற்றூட்டல் குறைகிறது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களான அம்பன், குடத்தனைப் பகுதிகளில் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற தீவிர மண் அகழ்வு விவசாய நிலங்களிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. மாரி காலத்தில் கடல் நீரானது விவசாய நிலங்களை அடைந்து அவற்றை களர், உவர் நிலமாக மாற்றிவிடக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதே காரணமாகும்.

***4. அமிலத்தன்மையை அடைதல்:-***

மழை அதிகமாக உள்ள இடங்களிலும் நீர் தேங்கி உள்ள இடங்களிலும் மண்ணில் உள்ள உலோக உப்புக்கள் நீர்ப்பகுப்பு அடைகிறது. மண்ணில் ஐதரசன் அயன்களின் செறிவு நீர்ப்பகுப்பின் மூலம் அதிகரிக்கப்படுகிறது. இதனால் மண் அமில இயல்பை அடையும்.

நீர் தேங்கியுள்ள நிலங்களில் காணப்படும் தாவரங்களின் வேர்கள் சுவாசத்தின் மூலம் காபனீரொட்சைட்டு வாயுவை வெளியேற்றுகிறது. காபனீரொட்சைட்டு வாயு நீரில் கரைந்து காபோனிக்கமிலம் எனும் ஒரு வகை அமிலத்தை உருவாக்கும். இது மண்ணுடன் கலக்கிறது.

விவசாயிகளால் அளவுக்கதிகமாக அமோனியம் சல்பேற் பயன்படுத்தும் போது தாவரங்களால் அமோனியம் அயன்பகுதி உள்ளெடுக்கப்படுகிறது. சல்பேற்று அயன் பகுதி மண்ணில் விடப்படுகிறது. நீர்ப்பாசனத்தின் போது நீருடன் சல்பேற்று அயன் சேர்ந்து சல்பூரிக் கமிலத்தை உருவாக்க மண் அமிலத்தன்மையை அடையும்.

அமில நிலங்களில் நைதரசன் பதிக்கும் பக்ரீறியாக்கள் உயிர்வாழ முடியாது இறக்கின்றன. சிலவகை பங்கசுக்களின் தாக்கம் பயிர்களில் அதிகரிக்கின்றது.

நீரை வழிந்தோடச் செய்வதன் மூலம் நீர் தேங்கி நிற்பதைத் தவிர்க்கலாம். சிபார்சு செய்யப்பட்ட அளவிலேயே உரப்பாவனையை மேற்கொள்வதன் மூலம் தரைகளில் சல்பேற்று அயன்கள் மேலதிகமாகச் சேர்வதைத் தடுக்கலாம். சிபார்சு செய்யப்பட்ட அளவில் சுண்ணாம்பைத் தரைக்கு இடுவதன் மூலமும், போதிய அளவு சேதனப்பொருள்களை இடுவதன் மூலமும் மண்ணின் அமில இயல்பைக் குறைக்க முடியும்.

***5. பாலைவனமாதல்:-***

மனித வாழ்விற்கு இன்றியமையாதவை இயற்கைத் தாவரங்கள். ஆனால் முன்யோசனை அற்ற முறையில் இத்தாவரங்கள் மனிதனால் தீவிரமாக அழிக்கப்பட்டு வருகின்றன என்பது ஒரு கவலைக்குரிய அதேவேளை கவனிக்கப்பட வேண்டிய விடயம். ஆசியாவின் 32 வீத நிலப்பரப்பு பாலைவனமாகும் ஆபத்தைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

விவசாய முயற்சிகளிற்காகவும், நகரநிர்மாணங்களிற்கான வீதி, கட்டட அமைப்புகளிற்காகவும், இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரையில் மேற்கூறிய காரணங்களுடன் போர் நடவடிக்கையும் ஒரு மேலதிக காரணமாக பாலைவன மாதலில் தனிப்பங்கு வகிக்கிறது. தென்மராட்சிப் பிரதேசத்திலும், தீவகப் பிரதேசத்திலும் பெருமளவிலான தென்னை, பனை என்பன போர் நடவடிக்கைக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. வடமராட்சி கிழக்குப் பகுதியில் விறகிற்காகவும், கட்டடத் தேவைகளிற்காகவும் மரங்கள் வெட்டப்படுகின்றன. இவை யாவும் விரைவாகப் பாலைவனம் உருவாக வழிசெய்யும்.

**ந.ரவிச்சந்திரன்,**
*கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர். அம்பன்.*

தாவரங்களை வகைதொகையின்றி அழிக்கும் போது மழை வீழ்ச்சி குறைவடைகின்றது. இதனால் ஏனைய எந்தவொரு தாவரமும் வளர முடியாமல் போகிறது. இந் நிலையால் மண்ணானது நேரடியாக வெளிக்குத் திறந்து விடப்படுகிறது. காற்று வீசும் காலங்களில் மண் மேற்படை அரித்துச் செல்லப்பட்டு மண்திட்டுகள் உருவாகின்றன. இந்நிலை விவசாய முயற்சி என்று இல்லாமல் எந்த ஒரு உயிரினமுமே உயிர்வாழ முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது.

எனவே மரங்கள் தறிக்கப்படுவது தடை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். தரிசு வெளிகளில் மர நடுகையை மேற்கொள்ளுவதுடன் மரங்கள் தறிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு மர மீள்நடுகையை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகள் மூலம் எமது விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட முடியும்.

*

# நவீன பசளைப் பிரயோகத்தின் பாதகமான அம்சங்கள்

ஒரு குறிப்பிட்ட விளைநிலத்திலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ்வேறு தொழில் நுட்ப முறைகளுள் பசளைப் பிரயோகமும் ஒன்றாகும். தாவரம் ஆரோக்கியமாக வளர்ந்து தரமுள்ள கூடிய விளைபொருள்களைத் தருவதற்கு இயற்கைப் பசளையுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையையும் உபயோகித்தல் அவசியமானதாகும்.

**ச.சின்னத்துரை**
*உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) யாழ்ப்பாணம்.*

ஆரம்பகாலத்தில் விவசாயிகள் கூடிய அளவில் இயற்கைப் பசளைகளை மாத்திரம் பாவித்துப் பயிர் செய்தனர். சனத்தொகை அதிகரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது. இதனால் பண்டைய விவசாய முறைகளைக் குறைத்து நவீன விவசாயத் தொழில் நுட்பங்களைப் பாவித்து அதிக உற்பத்தியைப் பெறுவதற்கு ஆரம்பித்தனர். இரசாயனப் பசளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில் நுட்பங்களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமச்சீர்ப்பசளைப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை முன்வைப்பதுடன் வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாயனப் பசளைகளையும், அவைகள் இடப்பட வேண்டிய காலங்களையும் சிபார்சு செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் சிபார்சு செய்து வருகின்றது.

இரசாயனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவசாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாகவும், சமச்சீரற்ற முறையிலும் பாவித்ததால் மண்ணும், நீரும், பயிர்களும் பாதிப்படைந்து வந்துள்ளன. தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப்போமானால் நம் இயற்கை வளங்கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவுகள் ஏற்படும். கூடுதலான இரசாயன உரங்களின் பாவனை பல்வேறு முறைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

(1) பயிருக்கு ஏற்ற சமச்சீர்ப் பசளைப் பிரயோகம் செய்யாவிடின் குறைவாக உள்ள மூலகம் பயிர் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் குறைக்கின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பாராட்டுகின்றேன்

எமது யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில்,

*1. 17 வயது அணி - 2ஆம் இடம்*
*2. 19 வயது அணி - 2ஆம் இடம்*

இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தேசியமட்டப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதிபெற்று எம்மைப் பெருமைப்படுத்திய, இரு அணியினரையும் பாராட்டுவதுடன் இவ் வெற்றிக்கு உந்துசக்தியாக விளங்கிய, மதிப்புக்குரிய அதிபர் **திரு.ச.சிவநேஸ்வரன்** அவர்களையும்மற்றும் துணைநின்ற ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமைஅடைகிறேன்.

**திரு.ச.கந்தசாமி,**
(ஓய்வுபெற்ற உப அதிபர்)
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(89926)


அதிகளவில் விற்பனையாகும்

## நிப்பொன் (NIPPON)

தன்னியக்க **Rice Cooker**

Non Stick

கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

அதிநந்த உத்தரவாத நாம் கொண்டது

*5% விலைக் கழிவு*



- ★ சக்தி சேமிப்புடன் அதிக விரைவான சமையல்
- ★ வெப்பநிலை பேணக் கூடியது
- ★ 9க்கு மேற்பட்ட வடிவங்கள்
- ★ மலர் வடிவங்களும், கவர்ச்சிகரமான வண்ணங்களை கொண்டது
- ★ With / Without Steamer
- கண்ணாடி / Stainless மூடி

ஒரு வருட உத்தரவாதம்

NEW

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## VEMBADI GIRLS' HIGH SCHOOL
OLD GIRLS' ASSOCIATION

## ANNUAL GENERAL MEETING

We are pleased to inform the Old Vembadians that the Annual General Meeting of the Old Girls' Association will be held on 12th July 2001 at 3.00p.m. at the Mable Thambiah Hall.

*All are requested to be present for the Meeting.*

**Secretary,**
***Old Girls' Association.***

(C/17352)

# 3ஆம் மாத நினைவஞ்சலி

பிறப்பு 07 - 05 - 1951



இறப்பு 12 - 04 - 2001

## அருள்திரு. பற்றிக் இம்மானுவேல்

**(குணேன்)**

**"கடல் கடந்து சென்று இறைபணியாற்றினீர்**
**இறைவனின் இன்ப சந்நிதானத்தில்**
**இளைப்பாறுவீர் அமைதியில் என**
**எங்கள் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்."**

எமது அன்புக்குரிய மகனும் சகோதரனுமாகிய அருள்திரு. பற்றிக் இம்மானுவேல் அடிகளாரின் மரணச்செய்திகேட்டு, எமது துன்பத்தில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் அளித்துப் பல விதத்திலும் உதவிகள் புரிந்த ஆயர்கள், குருக்கள், துறவியர், கன்னியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இவரின் இளைப்பாற்றுக்காக பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் தேவாலயத்தில் நாளை (12.07.2001) வியாழக்கிழமை முற்பகல்11.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்மா இளைப்பாற செபிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
**சில்வியா இம்மானுவேல்**
**திருமதி ராணி அரியநாயகம்.**

*54/3, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை,*
*பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.*

(89909)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் நிகழ்வில் இந்தவாரம் திருமதி ஜெகவதனராஜா 'இறைமகனார் துறவு' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு ஆற்றுவார். அதற்குரிய அறிமுகவுரையை க.சிவக்கொழுந்து நிகழ்த்துவார். (ம-173)

## நவீன பசளைப்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

(02) நைதரசன் பசளையை (அமோனியம் சல்பேற் அல்லது யூரியா) கூடுதலாகப் பாவித்தால் பயிர்களின் பதிய வளர்ச்சி கூடுதலாக நடைபெறுவதுடன், பீடை நோய்களின் தாககங்களும் அதிகரிப்பதுடன் உற்பத்தியும் குறைகின்றது.

(03) நைதரசன் பசளையை அளவுக்கு மேலதிகமாகப் பாவிக்கும் போது மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக் கீழ் நீருடன் கலப்பதால் குடிதண்ணீர் மாசடைகின்றது. நைதரேற் நச்சுத் தன்மையால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

(04) அமோனியம் சல்பேற்றைக் கூடுதலாகப் பாவிக்கும் போது, நிலம் அமிலத் தன்மையாக மாறுகின்றது.

(05) நீர் வடிப்புத் தன்மை குறைவாக உள்ள உவர் நிலங்களில் கூடிய இரசாயனப் பசளைகளைப் பாவிக்கும் போது உவர்த்தன்மை மேலும் அதிகரிக்கிறது.

(06) மண்ணை வளமாக வைத்திருக்க உதவி செய்கின்ற, மண்ணில் வாழுகின்ற பக்றீரியா, பங்கஸ், அல்கா போன்ற நுண்ணங்கிகள் கூடிய இரசாயன பசளைப் பிரயோ கத்தால் குறைக்கப்படுகின்றன. சில வேளைகளில் சாகடிக்கப்படுகின்றன.

(07) மண்புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன. கூடிய இரசாயன உரப்பாவனையால் இவைகளின் எண்ணிக்கை மிகக் குறைகின்றது. மேற்குறிப்பிட்ட தாக்கங்களைக் குறைத்து பயிர் உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளாவன:

(01) மண்வளத்தை பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில் இயற்கைப் பசளைகளான எருவகைகள், கூட்டெரு, பசுந்தாட் பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும். ஒரு ஏக்கருக்கு 8-10 தொன் (20வண்டில்) இயற்கைப் பசளையை வருடா வருடம் இடுதல் வேண்டும்.

(02) சமச்சீர் இரசாயன உரப்பாவனையை விவசாயத் திணைக்களம் சிபார்சு செய்யும் அளவில் மேற்கொளளுதல் வேண்டும்.

(03) ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவத்துடன், நீர் முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

## விற்பனைக்கு

*கொழும்பிலிருந்து பொருள்கள் வந்த வெற்று மரப்பெட்டிகள் விற்பனைக்குண்டு.*

*தொடர்பு:-*
**ஜமுனாஸ்ரோர்ஸ்,**
**பிரதான வீதி, நெல்லியடி.**

(89936)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
**LML SELECT II**
**500 - SCOOTER**
மற்றும்
**BAJAJ SUPER -FE**
**SCOOTER**
விற்பனைக்குண்டு.

*தொடர்பு:-*
**ஜமுனாஸ்ரோர்ஸ்,**
*பிரதான வீதி, நெல்லியடி.*

(89935)

## விற்பனைக்கு

**8'டிஸ் அன்ரனாக்கள்,**
**டிஜிடல் மற்றும்**
**அனலொக் ரீசீவர் செற்**
**ஆகியவை விற்பனைக்கு உண்டு.**
தொடர்பு:
**அருண் வீடியோ மூவி,**
**பிரதான வீதி,**
**நெல்லியடி.**

(89937)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 27 - 11 - 1985



உதிர்வு 11 - 06 - 2001

## செல்வன் விக்கினேஸ்வரன் பிரதீபன்

எங்களின் குலத்தின் தெய்வம்!
எழிலுறு தோற்றம் கொண்டோன்!
தங்கமே நிகர்த்த உள்ளம்
தகுதியிலே நிறைந்த செல்வன்!
மங்கலப் பிரதீபன் தான்
மண்ணிடை நம்மை விட்டே
இங்குநாம் கலங்கச் சென்றான்
எவ்விதம் பொறுப்போம் நாமே?

11.06.2001 அன்று அமரத்துவமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் -

இன்று (11.07.2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துன்புறும்:
**அப்பா, அம்மா,**
**சகோதரர்கள், அப்பம்மா**

*இராமநாதன் கலட்டி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(89929)

## பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
## பளை

பதிவு இலக்கம PA/44 -29.01.71

## முக்கிய அறிவித்தல்

### வாக்காளர் பட்டியலை முடிவுறுத்தல்

இச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவை விரைவில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்ஏற்பாடாக கிளைப் பொதுச் சபைக்குச் சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களது பட்டியல் 2001-06-30இல் உள்ளவாறு தயாரிக்கப்படவுள்ளது. கிளை ரீதியாகத் தயாரிக்கப்பட்ட முழுப்பங்கினைச் செலுத்திய உறுப்பினர் பட்டியல், சங்கத்தின் சகல கிளைகளிலும் (இன்று) 11-07-2001 ஆம் திகதி தொடக்கம் 24-07-2001ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் அல்லது பெயரிலோ, முகவரியிலோ பிழை உள்ள வர்கள் தமது ஆட்சேபனையை 27-07-2001ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். இதுவரை தமது பங்கினைப் பூரணப்படுத்தாதவர்கள் மிகுதிப் பணத்தினைச் செலுத்தித் தமது பங்கை 27-07-2001ஆம் திகதிக்கு முன் பூரணப்படுத்திக் கொள்ளவும்.

- செயலாளர்.

***பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,***
*பலாலி வீதி, கோண்டாவில்.*
11-07-2001

(C/17358)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் நடேசர்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சுதுலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நடேசர் 03.07.2001 செவ்வாய்க்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நடேசர் (இளைப்பாறிய முகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்-யாழ். பிராந்தியம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா, மதியாபரணம் மற்றும் திருமதி செல்லம்மா (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானசுந்தரம் (அமெரிக்கா), சிவகாம்பிகை (சுதுமலை), சிவயோகசுந்தரம் (கொழும்பு), கமலாம்பிகை (கொழும்பு), இராஜேஸ்வரி (கொழும்பு), சிவராஜசுந்தரம் (அபுதாபி) ஆகியோரின் அன்புத் தாயாரும், லக்ஷ்மி (கனடா), பாலேந்திரன் (அரசினர் வைத்தியசாலை, சங்கானை), எஸ்தர் (கொழும்பு), உருத்திரமூர்த்தி (கொழும்பு), மைதிலி (அபுதாபி) ஆகியோரின் அன்பு மாமியும், சிவசுரேஸ் (கொழும்பு), சிவசுரேசினி (கொழும்பு), நரேன் (கொழும்பு), குமரன் (யா/பரியோவான் கல்லூரி), நந்தன் (யா/பரியோவான் கல்லூரி), முகுந்தன் (கனடா), புவனி (கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சுதுமலை வடக்கு மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பா.சிவகாம்பிகை.

*சுதுமலை வடக்கு,*
*(செல்லத்துரை பாடசாலை அருகாக)*
*மானிப்பாய்.*

(89919)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இணுவில் கிழக்கு அருள்மிகு அன்னமார் கிருஷ்ணர் ஆலய எழுந்தருளி விக்கிரகம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட கிருஷ்ணர், பாமாதேவி, ருக்குமணிதேவி ஆகிய தெய்வங்களின் விக்கிரகங்களே பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. (ம-4)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ம-4)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம் ஸ்ரீ சொர்ணாம்பிகா தேவியின் வருடாந்த மகோற்சவம் (ஆடிப்பூர மகோற்சவம்) எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

விசேடமாக எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு சுமங்கலி பூசையும், சதுர் ஷஷ்டி உபசார பூசையும் — 22 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு சப்பறமும், 23 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற உள்ளன. (ம-152)

★ ★ ★

வல்வை வைத்தீஸ்வரன் கோயில் தேவி மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் ஊறணி சமுத்திர தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (க-3)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான உற்சவ வரதராஜ ஸ்வாமி நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

இதற்கான ஆரம்பக்கிரியைகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின. இன்று புதன்கிழமை அடியார்களின் பால்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

சிவப்பிரம்மஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும். இதற்கான புதிய உற்சவ விக்கிரகத்தை யாழ்ப்பாணம் ஸ்தபதி வே. இராம ஆசாரியார் நிர்மாணித்துள்ளார். (க-15)

★ ★ ★

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய திருவிழாத் திருப்பலி இன்று புதன்கிழமை காலை 7.15 மணிக்கு அருட்தந்தை ஜூலிஸ் பொன்னையா தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

'புனிதரின் பாதையில் நாமும் வாழ்வோம்' என்ற மையக் கருத்தில் இன்றைய திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதாக ஆலய பங்குத்தந்தை தெரிவித்தார். (ம-6)

## அல்வாயில் இளைஞன் கைது

அல்வாயப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அல்வாய், இன்பருட்டியைச் சேர்ந்த திருஞானசம்பந்தபிள்ளை திலக்ரூபன் (வயது 25) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி பகல் 11 மணியளவில் வீட்டில் வைத்து இவர் கைது செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## நடமாடும் செயலக சேவை

வலிமேற்கு, ஜூலை 11

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக நடமாடும் சேவை, இம் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா மேற்கொண்டுள்ளார்.

வட்டு. வடக்கு, வட்டு கிழக்கு, வட்டு. தெற்கு, வட்டு மேற்கு, வட்டு. தென் மேற்கு, சங்கரத்தை ஆகிய ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் பலதரப்பட்ட குறைபாடுகள் இந்த நடமாடும் செயலக சேவையின் போது தீர்த்து வைக்கப்படவுள்ளன. இப் பகுதி மக்களை இந்த நடமாடும் செயலக சேவையில் பங்கு பற்றி, தமது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-175)

## மாதாந்த கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 11

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காச நோயால் பீடிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுகள் நேற்று தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன.

கொடிகாமம் அஞ்சல் அலுவலகம், மிருசுவில், விடத்தற்பளை, கச்சாய், மந்துவில் ஆகிய உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றின் இக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் கரம்பைக்குறிச்சி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் தற்காலிக அஞ்சல் அலுவலகத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாமென அஞ்சல் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

இக் கொடுப்பனவுகளை ஜூலை 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## விளையாட்டு நிகழ்வு

வலி. வடக்கு, ஜூலை 11

நல்லூர்ப்பிரதேச சபையின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருக்கும் சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 9 வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள கால்இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:–

★ கோண்டாவில் அமரகவி சனசமூக நிலைய அணி எதிர் கொக்குவில் சிவகுரு சனசமூக நிலைய அணி. (ம-86)

# வல்லுறவில் ஈடுபட்ட படையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதியிடம் டக்ளஸ் 'பக்ஸ்' மூலம் கோரிக்கை

அல்லாரைப் பகுதியில் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக்கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து ஈ. பி. டி. பி. விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். குடாநாட்டிலுள்ள அல்லாரைப் பகுதியில் பெண் மணி ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்பாவிப் பெண்கள் மீதான தாக்குதல்கள் தொடருவதை உறுதிப்படுத்தும் மற்றுமொரு சம்பவம் இதுவாகும் இத்தகைய சம்பவங்கள் தொடருவதற்கு எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது என்பதனால் உடனடியாக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை, பாதுகாப்புப் படையில் இருக்கும் ஒரு சில காமுகர்களின் மோசமான செயல்களைச் சுட்டிக்காட்டி ஒட்டுமொத்தமாக அரசாங்கத்துக்கு அபகீர்த்தியையும், படையினருக்கு எதிரான பகையையும் தூண்டிவிடக் காத்திருக்கும் சக்திகளுக்கு இவை தீனியாகப் போய் விடுகின்றன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடருகின்ற யுத்த சூழலிலும், எந்த நேரமும் அசம்பாவிதங்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்ற பதற்றமும் மிக்க சூழலில் பணிபுரியும் படையினர் பாலியல் பலாத்காரங்களில் ஈடுபடுவதானது மண்ணுக்கு அந்நியமான ஆக்கிரமிப்பாளர்கள் என்ற எண்ணம் வலுப்பெற உதவுவதாகி விடும் என்பதையும் உணர வேண்டும்.

மேலும் காமுகர்கள் சிறையில் இருப்பதன் மூலம், விதிவிலக்குப் பெற்று விடலாம் என்ற எடுகோள் தவறானது என்பதும் பதிய வைக்கப்பட வேண்டும். இத்தகைய காரணங்களுக்காகவும் பாலியல் பலாத்கார சம்பவங்களைத் தடுக்க தங்களின் துணிவான விரைவான செயற்பாடு அவசர அவசியத் தேவையாகிறது.

அத்துடன் இக்கொடூரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு மிக கடுமையான தண்டனை கிடைக்கச் செய்வதன் மூலம் எதிர்வரும் காலங்களில் இக்கொடூரங்கள் நிகழா வண்ணம் தடுக்கப்பட வேண்டும்— என்றுள்ளது. (க-3)

## யாழ். பல்கலை ஊழியர் சங்கம்

# பேரவை கூட்டத்தை கூட்டுமாறு துணைவேந்தரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

உயர்கல்வி, தகவல் தொழில் நுட்ப அமைச்சரின் பணிப்பின் பேரில் மூடப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தில் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பாக ஆராய்வதற்காக —

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டுமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தை மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டதை அடுத்து பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளதால் இது தொடர்பாக உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறும் ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-6)

# ஆளும்கட்சியினர் மூடைமுடிச்சுடன் வெளியேறும் நாள் நெருங்கிவிட்டது!

## பேருவளைக் கூட்டத்தில் ரணில்

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் அரசாங்கம் நாடாளுமன்றத்தினதும் மக்களினதும் ஆதரவை இழந்துள்ளது என்று பேருவளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இக்கூட்டத்துடன் ஐ. தே. க. தனது பிரசாரத்தை தற்போது வெளி மாவட்டங்களுக்கும் விஸ்தரித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுவதை முறியடிப்பதற்கு ஆளும்கட்சியினர் பல்வேறு தந்திரோபாயங்களையும் கையாண்டு வருகின்ற போதிலும், அவர்கள் மூட்டைமுடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வெளியேறும் நாள்கள் அண்மித்துக்கொண்டிருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

இன்றைய முக்கியமான கட்டத்தில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைக்கும் முயற்சிகளில் அரசாங்கம் இறங்கினால் அதனை முறியடிக்கும் முயற்சிகளை ஐ.தே.க எடுக்கும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து அரசாங்கம் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்து விட்டது என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

தவறான பொருளாதார முகாமைத்துவம், ஊழல், வாழ்க்கைச்செலவு உயர்வு என்பவற்றால் மக்களின் அதிருப்தி வளர்ந்துள்ளது. இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளும் சிக்கலாகியுள்ளன. இந்தப் பிரச்சினைகளை முதலில் தீர்த்தல் அவசியம். இதற்கு அரசாங்கத்திடம் திறமையில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க அங்கு பேசினார்.

ஐ. தே. க. பிரதித்தலைவர் கரு ஜயசூரிய துணைத்தலைவர் காமினி அத்துக்கோறளை ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (க)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான 3இளைஞர் விடுதலை

## யாழ். நீதிவான் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 11

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த மூன்று இளைஞர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று யாழ். நீதிவான் இ. த. விக்னராஜாவால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் படையினரால் கைது செய்யப்பட்டிருந்த சின்னத்துரை சுபாகரன் (இயற்றாலை, வரணி), வேலாயுதன் ஜெயராசா (புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு), கடந்த வருடம் ஜூன் மாதம் கைது செய்யப்பட்டிருந்த சச்சிதானந்தம் சுதன் (ஈவினை, புன்னாலைக் கட்டுவன்) ஆகிய மூன்று இளைஞர்களுமே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மூன்று இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியிருப்பதால் இவர்களை விடுதலை செய்வதாக நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்தார். (க-6-9-173)

## பாலர் விளையாட்டு விழா

இணுவில் அண்ணா பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தலைவர் க. காந்தரூபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் கா. கமலசேகரம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆர். கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-86)

★ ★ ★

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் யாழ். பாலர் பாடசாலையின் 9ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு செல்வி க. வளர்மதி தலைமையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் இரா. சிவச்சந்திரனும், கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. லோ. யோகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக பாலர் கல்விக்கழகத்தின் உப தலைவி திருமதி புஸ்பா சூரியகுமார், யாழ். கல்வி வலயத்தின் ஆசிரிய வளநிலைய இணைப்பாளர் பூ. குகதாசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## O/L MATHS

புதிய, பழைய பாடத்திட்டத்தில் **Distinction, Credit** பெறுபேறுடைய **Paper Class** உட்பட ஆண்டு 6-10 வரை கற்பிக்கப்படும். ஆசிரியர்:- இல. 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (89905)

## பொய்யா மொழி ஜோதிடம்

கல்வி, விவாகம், புத்திரர், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம் போன்றவற்றில் தடைகள் நீங்க ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திருப்பப் பெறலாம். சனி, செவ்வாய் நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும, ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (89913)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற விஞ்ஞான ஆசிரியருக்கு படித்த, அழகுள்ள மணமகளைத் தாயார் எதிர்பார்க்கின்றார். தொடர்புகளுக்கு: விள.இல.1324. மே/பா. உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89920)

## நாடகம்

'நல்லதோர் வீணை' நாடகத்தை யாழ்.சேவையில் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள், 2. யாழ்ப்பாணமா? கொழும்பா?, 3. நாடகம் எழுதுவது எப்படி?, 4. இலக்கியக் கட்டுரைகள். (89923)

## வாணி சோதிடம்

கைரேகை, ஜாதகக்குறிப்பு, வீட்டு நிலையம், விவாகப் பொருத்தம் மற்றும் நினைத்தகாரியம் பார்ப்பதும். நாம் கூறும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகின்றது. சகல இன மதத்திலும் மணமக்கள் உண்டு. தொடர்பு: சோதிடர் சி.கணேசன், 22/1, கச்சேரி வீதி, நல்லூர்.(89938)

## இடம்மாற்றம்

1963இல் ஆரம்பிக்கப்பட்ட வாணி சோதிட நிலையம் இல.95, யாழ்ப்பாணம் மேற்கு மார்க்கட்டில் இருந்து 03.07.2001 முதல் 237/16, கே.கே.எஸ் வீதிக்கு (ஆனந்தமூர்த்தி சைக்கிள் கடைக்கு அருகில்) இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஞாயிறு தவிர தினமும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சந்திக்கவும். நல்லூர் சிவன்கோயிலடி நிலையம் மறு அறிவித்தல் வரை திறக்கப்படமாட்டாது. (89939)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன **Dashound** பெண் நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. இல.19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89922)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

**Broiler, Cullbirds, Cockerels, Soup Chicken** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழிகள் உட்பட) தினமும் காலை 6.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) (முத்திரைச் சந்தையடி) நல்லூர். (89921)

## தவறிவிட்டது

வேலணை மேற்கைச் சேர்ந்த அரசரத்தினம் கமலநாதன் என்பவரது தே.அ.அ. (இல.621021893V) கலட்டி அம்மன் வீதிக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் இடையில் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இராமநாதன் வீதியிலுள்ள மிலேனியம் ரெஸ்ரோறன்றில் ஒப்படைத்துதவவும். (89942)

## தேவை

எழுத்தாளராய்ப் பணிபுரிய **O/L** சித்தியடைந்த பெண்பிள்ளை தேவை. 13.07.2001 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆவணங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். முகவரி: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (89925)

## விற்பனைக்கு

சம்பியன் லேனில் 9பரப்புக் காணியுடன் கூடிய வீடும் கடையும், நந்தாவில் லேனில் 64ஆம் இலக்கமுடைய 'ஆனந்தபவனம்' என்ற **21/2** பரப்புடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-V.கருணாமூர்த்தி, சம்பியன் லேன், கொக்குவில். (89910)

சகல கடைகளுக்குமேற்ற, மிகவும் நல்ல நிலையிலுள்ள ஷோக்கேசுகள (அலுமினியம், மரம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (89914)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் கடந்த 9ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (120145ஏ) | (120145பி) | (189738ஏ) |
| (189745ஏ) | (189758ஏ) | (189761ஏ) |
| (189761பி) | (189763ஏ) | (189763பி) |
| (190875ஏ) | (192993ஏ) | (192993பி) |
| (193249ஏ) | (195260ஏ) | (195260பி) |
| (195297ஏ) | (195308ஏ) | (195308பி) |
| (195308சி) | (195308டி) | (195424ஏ) |
| (195424பி) | (195424சி) | (197265ஏ) |
| (197265பி) | (197268ஏ) | (197268பி) |
| (197268சி) | (197320ஏ) | (197382ஏ) |
| (197382பி) | (197382சி) | (197382டி) |
| (197396ஏ) | (197396பி) | (197396சி) |
| (197501ஏ) | (197501பி) | (197610ஏ) |
| (197610பி) | (197610சி) | (197622ஏ) |
| (197675ஏ) | (199821ஏ) | (199821சி) |
| (199834ஏ) | (199837ஏ) | (199886ஏ) |
| (199886பி) | (199887ஏ) | (199887பி) |
| (199887சி) | (199931ஏ) | (199940ஏ) |
| (199942ஏ) | (199952ஏ) | (199952பி) |
| (199957ஏ) | (199967ஏ) | (200111ஏ) |
| (200115ஏ) | (200115பி) | (200115சி) |
| (200130ஏ) | (200140ஏ) | (200161ஏ) |
| (200162பி) | (200170ஏ) | (200170பி) |
| (200173ஏ) | (200188ஏ) | (200198ஏ) |
| (200198பி) | (200223ஏ) | (200223பி) |
| (200224ஏ) | (200224பி) | (200242ஏ) |
| (200261ஏ) | (200274ஏ) | (200281ஏ) |
| (200281பி) | (200288ஏ) | (200288பி) |
| (200300ஏ) | (202266ஏ) | (202266பி) |
| (202266சி) | (202266டி) | (202266ஈ) |
| (202279ஏ) | (202280ஏ) | (202303ஏ) |
| (202309ஏ) | (202317ஏ) | (202317பி) |
| (202318ஏ) | (202324ஏ) | (202326ஏ) |
| (202334ஏ) | (202334பி) | (202335ஏ) |
| (202349ஏ) | (202349பி) | (202351ஏ) |
| (202400ஏ) | (202401ஏ) | (202410ஏ) |
| (202412ஏ) | (202418ஏ) | (202433ஏ) |
| (202433பி) | (202433சி) | (202436ஏ) |
| (202436பி) | (202438ஏ) | (202449ஏ) |
| (202473ஏ) | (202473பி) | (202475ஏ) |
| (202506ஏ) | (202506பி) | (202511ஏ) |
| (202519ஏ) | (202546ஏ) | (202548ஏ) |
| (202838ஏ) | | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (197419ஏ) | (199862ஏ) | (200077ஏ) |
| (200077பி) | (200272ஏ) | (202349சி) |
| (202386ஏ) | (202386பி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (184530ஏ) | (184530பி) | (189731ஏ) |
| (189759ஏ) | (189759பி) | (195158ஏ) |
| (195158பி) | (195572ஏ) | (195576ஏ) |
| (197360ஏ) | (197360பி) | (197360சி) |
| (197360டி) | (197607ஏ) | (197607பி) |
| (197678ஏ) | (197678பி) | (197678சி) |
| (199849ஏ) | (200038ஏ) | (200113ஏ) |
| (200113பி) | (200114ஏ) | (200114பி) |
| (200149ஏ) | (200165ஏ) | (200165பி) |
| (200207ஏ) | (200248ஏ) | (200248பி) |
| (200248சி) | (200248டி) | (200257ஏ) |
| (200257பி) | (200282ஏ) | (200282பி) |
| (200282சி) | (200292ஏ) | (202284ஏ) |
| (202284பி) | (202285ஏ) | (202285பி) |
| (202291ஏ) | (202297ஏ) | (202297பி) |
| (202298ஏ) | (202298பி) | (202299ஏ) |
| (202310ஏ) | (202310பி) | (202310சி) |
| (202310டி) | (202310ஈ) | (202310எவ்) |
| (202311ஏ) | (202314ஏ) | (202314பி) |
| (202319ஏ) | (202319பி) | (202319சி) |
| (202322ஏ) | (202322பி) | (202327ஏ) |
| (202337ஏ) | (202343ஏ) | (202344ஏ) |
| (202346ஏ) | (202348ஏ) | (202348பி) |
| (202348சி) | (202358ஏ) | (202385ஏ) |
| (202387ஏ) | (202390ஏ) | (202392ஏ) |
| (202392பி) | (202392சி) | (202392டி) |
| (202399ஏ) | (202406ஏ) | (202407ஏ) |
| (202407பி) | (202407சி) | (202407டி) |
| (202426ஈ) | (202441ஏ) | (202451ஏ) |
| (202457ஏ) | (202457பி) | (202457சி) |
| (202457டி) | (202457ஈ) | (202463ஏ) |
| (202463பி) | (202467ஏ) | (202467பி) |
| (202468ஏ) | (202476ஏ) | (க-4-10) |

# அறிவித்தல்

**சைவ பரிபாலன சபை - யாழ்ப்பாணம்**

## தேர்வுத் திகதி மாற்றம்

இன்று 11.07.2001இல் நடைபெறவிருந்த இந்து நாகரிகம், இந்து சமயத் தேர்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 12-07-2001, 13-07-2001 ஆகிய இரு தினங்களிலும நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

வ.கந்தசாமி,
10-07-2001 (89953) *கௌரவ தேர்வுச்செயலாளர்.*

# குப்பிளான் கேணியடி ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில்

உ

**புனராவர்த்தன சம்புரோட்சண**

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**இன்று (11.07.2001) புதன்கிழமை**

காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் நடைபெறும்.

**நாளை (12.07.2001) வியாழக்கிழமை**

காலை 8.00 மணிக்கு யாகபூசை, மகா பூர்ணாகுதி, தீபாராதனை, கும்பவீதி.

9.00 மணிக்கு தூபி அபிஷேகம்.

9.30 மணிக்கு மஹா கும்பாபிஷேகம்.

பிரதிஷ்டா பிரதமகுரு: கிரியாகலாபமணி
**சிவஸ்ரீ சி.கிருஷ்ணசாமிக் குருக்கள்.**

*மங்கள இசை:* **பொன்.தவராசா** குழுவினர்.

**அடியார்கள் வந்து பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.**

(89947) - விழா உபயகாரர்.

# நன்றி கூறுகின்றோம்

வதிரி, கரவெட்டியிலுள்ள வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் ந.இரத்தினகோபால் ஆகிய நான் 05-10-1985 தொடக்கம் 24-01-2001 வரைக்கும் தொடர்ந்து சேவையாற்றி வந்துள்ளேன். தற்போது அதிலிருந்தும் நான் விலகிவிட்டேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

அத்துடன் மேற்படி ஆச்சிரமத்தை நான் நிர்வகித்த காலத்தில் ஆச்சிரமம் கஷ்ட நிலையில் உள்ளபோது கைகொடுத்துதவிய அனைவருக்கும் மற்றும் கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத் தலைவர், சபையினர், ஊழியர்கள், யூனியன் பேக்கரி, மையிலன் பேக்கரி(றோயல்), விநாயகர் தரும நிதியம், சுதர்சனம்(இளவரசி), திருமகள் ஸ்ரோர்ஸ், சிங்கம் ஸ்ரோர்ஸ், மாயவன் ஸ்ரோர்ஸ், நியூ இதயன்ஸ், அம்சன் ஒளியகம், செல்லமுத்தூஸ் புடவையகம், ஸ்ரீ முருகள் மருந்துக் கடை, மொடேண் ஸ்ரோர்ஸ்(நெல்லியடி), உமாபதி கந்தசாமி, வி.பி.பரமலிங்கம், என்.பாஸ்கரன்(என்.எஸ்.ஆர்), விண்மீன் அங்காடி, ஓம் சரவணாஸ், இந்திரா கபே, அக்கா கடை, ஆனந்தா உணவகம், மரக்கறி வியாபாரி பாலச்சந்திரன், ஆச்சியக்கா, கணேஸ்(ரகு), வேலாயுதம், மகேந்திரம், சண்முகப்பா, பழவியாபாரி, திருமதி மின்னொளி சித்தப்பா மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் ஆகிய அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*235, வி.மு.வீதி,*
*பருத்தித்துறை.* (89943)

திரு.ந.இரத்தினகோபால்.
(முன்னாள் முகாமையாளர்)

**இதோ மீண்டும் எமது சேவை !**

# CITY TRANSPORT SERVICE

சில கால இடைவேளையின் பின்னர் எங்களது சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்பதை அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது துரித சேவை மூலம் உங்களது தேவை பூர்த்தியாக்கப்படுகிறது! பொருள்களைத் தாமதமின்றி உடனடியாகவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர எமது சேவையை நாடுங்கள்.

*நாடவேண்டிய இடங்கள்:-*

யாழ்நகரில்:
*குமார் ஏஜென்சி முகவர் தபாலகம்*
T.P:- 021-3453 (89934)

கொழும்பில்:
18/5, கம்ஷா லேன்,
வெள்ளவத்தை.
T.P-01-585691

# SALES

COST TO COST SALES!

## சங்கமம் ரெக்ஸ்

வழங்கும்

**மாபெரும் ஆடி மாதச் சிறப்புத் தள்ளுபடி.**

10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு. இத்தள்ளுபடி 31.07.2001 வரையுமே!

(சகல ரெடிமேட் புடைவை வகைகளுக்கும்)

| ஆண்களுக்கான சேட் வகைகள் | | |
|---|---|---|
| **VAN SON SHIRT** | 550/= | 400/= |
| **MANCHESTER SHIRT** | 650/= | 500/= |
| **CHAROVA SHIRT** | 675/= | 550/= |
| **ROYAL MIRAGE** | 650/= | 550/= |
| **CITY SHIRT** | 575/= | 450/= |
| **WELSTER SHIRT** | 900/= | 750/= |
| T/சேட் வகைகள் | | |
| **ONLY YOU** | 450/= | 350/= |
| **TOMMY** | 450/= | 350/= |
| **FILA** | 450/= | 350/= |

| பெண்களுக்கான ஸ்கேட் பிளவுஸ் | | |
|---|---|---|
| **ERICA FROCK** | 950/= | 750/= |
| **ERICA S/BLOUSE** | 1050/= | 850/= |
| **LACE FROCK** | 1000/= | 850/= |
| **VELVET SKIRT** | 400/= | 300/= |
| **LACE BLOUSE** | 600/= | 450/= |
| **WHITE BLOUSE** | 550/= | 400/= |
| சிறுவர் சிறுமியர்களுக்கான | | |
| சோக்கோ சூட் | 750/= | 600/= |
| டெனிம் சூட் | 550/= | 400/= |
| கோட்டின் **FROCK** | 500/= | 350/= |

*சாறி வகைகள் மற்றும் அனைத்து ரெடிமேட் ஆடைவகைகளுக்கும் புடைவைகளுக்கும் நாடுங்கள்:*

## சங்கமம் ரெக்ஸ்

**54 A, நவீனசந்தை (உட்புறம்)** **யாழ்ப்பாணம்.** (C/17360)

# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகம் தங்கம்மா

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா கற்குழியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் தங்கம்மா (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், கிருஷ்ணகுமார், இந்திரகுமாரி, சந்திரகுமாரி ஆகியோரின் அருமைத் தாயாரும், தங்கராசா, சின்னையா, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், செல்லம்மா, காலஞ்சென்ற இராசரட்ணம் மற்றும் செல்லத்துரை சற்குணம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-07-2001) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா பூந்தோட்டம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (89940)

தகவல்:-
சீ.கமலாதேவி *(மைத்துனி)*

# யாழ்.சமூகத்தை.....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பனவே இராணுவத்தினரால் எடுத் துச் செல்லப்பட்டன. இதனை இரா ணுவம் திரிவுபடுத்தி திவ்வியனிடமி ருந்து மீட்டதாகப் பிரசாரப்படுத்தி வரு கின்றது.

எமது மாணவப் பிரதிநிதிகள் காங் கேசன்துறைத் தடுப்பு முகாமில் சந் தித்த போது திவ்வியன் தாக்கப் பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டுத் தாம் அணிந்திருந்த ரீசேர்ட்டை கைகளை உயர்த்திக் கழற்ற முடியா தவராகக் காணப்பட்டதனை நேரில் அவதானித்துள்ளனர்.

**பின்வாங்குவது சாத்தியமற்றது**

தற்போது எம் மக்களின் துன்பத் திற்காகக் குரல் கொடுத்துச் சிறை வாசம் இருக்கும் சக மாணவரின் விடுதலைக்காக யாழ்.பல்கலைக்கழ கம் கடந்த புதன்கிழமை முதல் மாண வர்களால் மூடப்பட்டுள்ளது. இத னைக் கல்வி அமைச்சு இன்று மீண் டும் மூடி உள்ளது. பகிஷ்கரிப்புப் போராட்டத்தினைக் கைவிட்டால் பல்கலைக்கழகம் மீண்டும் இயங்க அனுமதிக்கப்படும் எனத் துணை வேந்தர் தெரிவித்துள்ளார்.

யாழ்குடாநாடு அரச கட்டுப்பாட்டின கீழ் வந்த பின்னர் மனித உரிமைக் காகக் குரல் கொடுத்து ஓரளவிற்கே னும் மக்களின் நலன்களைப் பாது காத்து வருகின்ற அமைப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். அவ்வுரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த ஒரு மாணவனின் விடுதலைக் கான பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் நாம் பின்வாங்குவதென்பது நடை முறைச் சாத்தியமற்றது. ஏனெனில் குடாநாட்டில் வாழும் எம் அன்பிற் கும் மதிப்பிற்கும் உரிய மக்களின் வாழ்வு, இளைஞர்களின் உயிர்கள், பெண்களின் கௌரவம், ஒட்டு மொத் தமான தமிழ் மக்களின் இருப்பு என பவற்றைக் கேள்விக்குறியாக்கும் ஓர் அநாதரவான நிலையை இப்போராட் டத்தைக் கைவிடுவதன் மூலம் ஏற் படுத்திக் கொள்ள நாம் விரும்ப வில்லை.

எனவே நாம் நிம்மதியாகவும் சுதந் திரமாகவும் வாழ விரும்பினால் பல் கலைக்கழகம் இன்று எடுத்திருக்கும் முடிவிற்குச் சார்பாக யாழ்ப்பாண சமூகம் அணி திரள வேண்டும். பாட சாலைகளைத் தொடர்ச்சியாகப் பகிஷ் கரித்தும் அலுவலகங்களைப் பகிஷ் கரித்தும் எமது போராட்டத்திற்கு ஆத ரவு வழங்குமாறு வேண்டுகின்றோம். தவறுகின்ற பட்சத்தில் திவ்வியன் மட்டுமல்ல இன்னும் பல ஆயிரம் இளைஞர், யுவதிகள் கைதாகிப் படு கொலை செய்யப்படும் அவலநிலை உருவாகும். அந்நிலை உருவாகிய பின் பறிபோன உறவுகளின் உயிர் களைப் பற்றி, சீரழிந்துபோன பெண் களின் கௌரவத்தைப் பற்றி சிந்திப் பது கண்கெட்ட பின்பு சூரிய நமஸ் காரம் செய்வது போன்றதே. அன்பிற் குரிய தமிழ் மக்களே சிந்தியுங்கள்! தமிழ் மக்களிற்கான எமது அர்ப்ப ணிப்புத் தொடர வேண்டுமாயின் எம மோடு அணிதிரளுங்கள்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)


## University of Jaffna
## Important Notice

A Meeting of Deans of all the Faculties and the academic and administrative heads will be held on 11.7.2001, Wednesday at 10.30 a.m. in the Board Room of the University. Please be present.

Prof.P.BALASUNDARAMPILLAI
Vice - Chancellor.

(C/17365)



## வீடு விற்பனைக்கு

சபாபதி வீதி, தலையாழி, கொக்குவில் பகுதியில் 9 3/4 பரப்புடன் வீடு வளவு, பிரம்படி வீதி, கொக்குவில் பகு தியில் 10 பரப்பு நிலக்காணி, திருநெல்வேலிப் பகுதியில் 4 பரப்பு வீடு கட்டும் காணி என்பன விற் பனைக்கு உண்டு.

தொடர்பு:- **Mr.Skanthakumar.**
Room No :- 16, Green Lands Hotel,
3/A Shrubbery Gardens, Colombo - 4.
T.P No:- 585592, 581986

(89956)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும் வங்கி நலன் விரும்பியும் வாடிக்கையாளருமாகிய

**மயில்வாகனம் பிரேமச்சந்திரன்**

(உரிமையாளர், பொன்னுகடை - வல்வெட்டி)

அவர்களின் திடீர் மறைவினை ஒட்டி எமது கண்ணீர் அஞ்ச லியை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துய ருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதா பங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்
மக்கள் வங்கி, வல்வெட்டி.

(C/17373)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்: 08 - 12 - 1915



விண்ணில்: 11 - 06 - 2001

### அமரர் பசுபதி சோமசுந்தரம் (P.S)

அன்பெல்லாம் ஓருருவாய் அமைந்த எம் ஐயா!
இன்னலற்ற நல்வாழ்வு நாம்வாழ வழியமைத்தீர்!
துன்பமுறும் எவர் துயரும் துடைத்த தூய் மனத்தாய்!
பொன்மேனி நீத்து சிவன் பொற்பதம் நாடினையோ?

11-06-2001 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (11-07-2001), புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(89958)


IPE நிறுவன முதலாவது LOGIC பயிற்சிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றோர்.

| | |
|---|---|
| S. சஞ்சீவன் | 95 |
| S. சிவசங்கர் | 94 |
| S. ஜெயந்திமாலா | 90 |
| S. கவிதா | 89 |
| கார்த்திகா | 87 |
| S. சுபதினி | 84 |
| R. மதிவதனா | 84 |
| S. கல்யாணி | 83 |
| வனஜா | 82 |
| K. லெனின்குமார் | 81 |

EXAMINER:
**MR.P.KAMAL**

(89963)


## தொலைந்துவிட்டது

நேற்று (10.07.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆறு 1000/= ரூபா நோட்டுக்கள் (6000/= ரூபா) யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கும் இந்துக் கல்லூரி மைதானத்துக்கும் இடையில் கஸ் தூரியார் வீதியில் நீராவியடிக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் தவறி விழுந்துவிட்டன. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியாளரிடம் தொடர்பு கொள் ளவும். சன்மானம் வழங்கப்படும்.

திரு.கனகரத்தினம் யோகேந்திரன்
(வி.அ.அ.இல.0902013913)
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(89949)


ராஜா யாழ்ப்பாணம்

கடைசி வாரம்
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பி.நே.)

(C/17266)



நாகம்ஸ் சுன்னாகம்

சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த
முதலமைச்சர் ஜெயந்தி
(ரீலீஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு
13.07.2001 முதல்
மாயி


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாரணிய வழிகாட்டுநர் 33பேர் கொழும்புக்குப் பயிற்சிக்குச் செல்வதற்காக காங்கேசன்துறை - திருகோணமலை ஒரு வழிப் பயணத்தை ஏற்படுத்தித் தந்ததற்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும் -
கௌரவ **திரு.வி.கே.குகேந்திரன் (ஜெகன்)**
(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்களையும்
நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

ஆணையாளர்கள், வழிகாட்டுநர்,
**யாழ்.மாவட்ட பெண் சாரணிய மன்றம்.**

(C-17368)


வலி. தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும்

**திரைப்படக் காட்சி**

இடம் :- நாகம்ஸ் திரையரங்கு, சுன்னாகம்.
காலம்:- 12.07.2001 வியாழன்
10.30 - குங்குமப் பொட்டுக் கவுண்டர்.
2.30 - மிடில் கிளாஸ் மாதவன்.
ரிக்கற்றுக்கள் திரையரங்கில் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பர அன்பளிப்பு:- ஸ்ரீ கிருஷ்ணா அழகுமாடம்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகம்.

(C-17366)


உ

## யாழ்ப்பாணம் - வண்ணை - நீராவியடி
## ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாத பரமேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

– கடையிற்சுவாமி சமாதிச் சிவாலயம் –

### மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

எண் டோள் களும் வீசி எழில் சேர் நடம் ஆடிக்
கண் டோர் கலிநீக்கும் கடையிற் குருதாளை
வண்டுழ வீடுசோலை வண்ணைப் பதிமேவித்
தொண்டாம் புணை ஏறித் தொடர்ந்து ஆட்படுவீரே

*அன்புடையீர்!*

எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று (11-07-2001) புதன்கிழமை நண்பகல் வரை நடைபெறும். நாளை (12-07-2001) வியாழக்கிழமை காலை 06.24 முதல் 7.09 வரையில் வரும் சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

☆ *அடியார்கள் அனைவரும் வந்து குடமுழுக்குப் பெருவிழா வைத் தரிசித்து எம்பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யு மாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

- கும்பாபிஷேகக் குழுவினர்.


*விளம்பர அன்பளிப்பு:-*
கணேசன் புடைவையகம்
*பெரியகடை, யாழ்ப்பாணம்.*

(C/17364)


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு லோகநாதன்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது ஹொலண்டில் வசித்தவருமான முருகேசு லோகநாதன் (06-07-2001) வெள்ளிக்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதி களின் அன்பு மகனும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் கந்தசாமி, தவமணிதேவி, கணேசநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஹொலண்டில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
கந்தசாமி கனகமணி
(மைத்துனி)

(C/17370)

### கணேசவேல் மேனகா

கந்தரோடை கந்தையா உபாத்தியார் வீதியை பிறப்பிடமாக கொண்ட கணேசவேல் செல்வராணி தம்பதியினரின் மூத்த மகள் மேனகா (ஆசிரியை, உடுவில் மதவடி மான்ஸ் றோ.க.பாடசாலை) நேற்று (10.07.2001), செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகா (கலைப்பீடம், முதலாம் ஆண்டு, யாழ்.பல்கலைக்கழகம்), சுலேகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (11.07.2001) புதன்கிழமை 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தரோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை

தகவல்:
க.கணேசவேல்
(தந்தை)

(C/17371)

# திவ்வியனை விடுவிக்கக் கோரி கிழக்குப் பல்கலை, வவுனியா வளாக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்

வவுனியா,ஜுலை11

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் -

யாழ்.பல்கலைக்கழகத்தை மீளத் திறக்குமாறு கோரியும் -

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழக வளாகம் ஆகியவற்றில் நேற்றுப் பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (க-ஒ-3)


எமது ஓடியோ CD வெளியீடுகள்

★ மஜ்னு
★ சாக்லெட்
★ லவ்லி
★ தோஸ்த்
★ பியூட்டி
★ லேடீஸ் அன் ஜென்டில்மென்

விலைக்கழிவுடன் பதிவு செய்யப்பட்ட CD 300/=

மெலோடியஸ் மியூசிக்
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/17367)



புதிய ஓடியோ CD (Five Star) வெளியீடுகள்

தேவாவின் இசையில்:
★ லவ்லி
★ சாக்லெட்
★ பியூட்டி
★ தோஸ்த்

ஹரிஸின் இசையில்:-
★ மஜ்னு

மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-3646 (89954)


## பல்கலை நிர்வாகிகள் கூட்டம்

யாழ்.பல்கலைக் கழகத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்காக பல்கலைக்கழக நிர்வாகிகளின் அவசரக் கூட்டம் ஒன்றை இன்று காலை 10.30 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கூட்டவுள்ளார்.

சகல பீடாதிபதிகள், கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## அலவாங்கால் தாக்குண்டவர் மரணம்

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் அலவாங்கால் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

மாதகலைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தசாமி (வயது - 47) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

அலவாங்குத் தாக்குதலால் மண்ணீரல் பாதிப்படைந்திருந்ததை நேற்று முன்தினம் கண்டறிந்த டாக்டர்கள் சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்தனர். எனினும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிததன. (க-6)

# செம்மணி புதைகுழி எலும்புக் கூடுகள்; மரபணுச் சோதனை ஹைதராபாத்தில்!

செம்மணிப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளில் அடையாளம் காணப்பட்ட ஐந்து எலும்புக்கூடுகளின் மரபணுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் ஒப்பீடு செய்வதற்காக சம்பந்தப்பட்ட ஐந்து எலும்புக்கூடுகளுக்கும் உரியவர்கள் என்று கருதப்படுபவர்களின் உறவினர்கள் எட்டுப் பேரின் இரத்த மாதிரிகள் இந்த மரபணுப் பரிசோதனை நடைபெறும் ஹைதராபாத் ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அது பற்றிய அறிக்கை வந்த பின்னரே செம்மணிப் புதைகுழி தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தொடர முடியும்.

- இப்படி செம்மணிப் புதைகுழி தொடர்பான புலன்விசாரணை நடத்தும் அதிகாரி, கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இவ்வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு செப்ரெம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## விடுவிக்கக் கோருகிறது ஆசிரியர் சங்கம்

☆பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இல்லை,அவர் குற்றம் செய்தவர் எனப் படைத்தரப்புக் கருதினால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும்.

☆மூடப்பட்ட யாழ். பல்கலைக் கழகத்தைத் திறக்கும்படி உடனடியாகப் பணிக்க வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதியையும் உயர்கல்வி அமைச்சரையும் கோருவதென நேற்றுத் திருமலையில் கூடிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு முடிவு செய்துள்ளது.


இன்றைய ஓடியோ CD வெளியீடு

✪ லவ்லி
✪ லேடீஸ் அன் ஜென்டில்மென்
✪ மஜ்னு
✪ சாக்லெட்
✪ தோஸ்த்
✪ பியூட்டி

ஆங்கில திரைப்பட CDக்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

மூர்த்தி வீடியோ
மானிப்பாய். (C/17369)



எமது புதிய ஓடியோ CD வெளியீடும் விற்பனைகளும்

✪ தமிழ் புத்தம் புதிய ரீமிக்ஸ் Vol 1 - 2
✪ புத்தம் புதிய கியூக் ரீமிக்ஸ் Vol 1 - 2
✪ கானா 2001 Vol - 2
✪ தேவாவின் நிலவிலிலே
✪ A.R.ரகுமானின் ஹிந்தி ரீமிக்ஸ்
✪ பழைய புதிய ஓடியோ CDக்கள் அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ITN வீடியோ & ஓடியோ
305, பரமேஸ்வரார் சந்தி,
திருநெல்வேலி. (89953)



பதவி வெற்றிடம்

பரி.லூக்கா மெதடிஸ்த வைத்தியசாலை
: புத்தூர்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மருந்தாளர் - PHARMACIST
2. பதிவு செய்யப்பட்ட தாதி - REGISTERED NURSE
3. பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தாதி - REGISTERED MID WIFE

விண்ணப்ப முடிவு திகதி: 20-07-2001

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
முகாமையாளர்,
அருட்திரு.க.கருணசேகரா,
மெதடிஸ்த திருஅவை,
'லொக்வூட் கவுஸ்',
இல.9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(89931)



விஜேயின் புதிய ஓடியோ CD வெளியீடுகள்

✳ மஜ்னு
✳ தோஸ்த்
✳ பியூட்டி
✳ லவ்லி
✳ லேடீஸ் அன் ஜென்டில்மென்
✳ சாக்லெட்

"இன்னிசை உலாவரும் இன்ப இசைச்சோலை"
விஜேய் ரெக்கோடிங் சென்ரர்
539, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
கிளை:- பிரதான வீதி,
மானிப்பாய். (89961)



பொருளியல் கருத்தரங்கு
S.வரதராஜன் BA(Hons)

23-07-2001 திங்கள் பொருளியல் I
25-07-2001 புதன் பொருளியல் II
தினமும் 8.00 - 2.00 மணி வரை

✪ 48 மாதிரி வினா - விடைக் குறிப்புகளும் இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்காலப் போக்குகள் பற்றிய குறிப்புகளும் வழங்கப்படும்.
✪ கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் 16-07-2001 ஆம் திகதிக்கு முன்பாகப் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

கிறிஸ்ரல் கல்வி நிலையம்
நெல்லியடி. (89930)



திரு ஸ்ரூடியோ திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11-07-2001) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள கட்டடத்தில்

திரு ஸ்ரூடியோ

என்னும் புகைப்படம் பிடிக்கும் ஸ்தாபனத்தினை ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந்தத் திறப்பு விழா வைபவத்துக்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரூடியோவைத் திறந்து ஆரம்பித்து வைப்பவர்:
தொழிலதிபர் திரு.S.V.ஸ்ரீதரன்.
உரிமையாளர்:
KONICA COLOUR LAB
யாழ்ப்பாணம்.

பிரதான வீதி,
பருத்தித்துறை.
(V.M.V. அருகில்)

தங்கள் நல்வரவை நாடும்:
K.V.S.திரு
- திரு ஸ்ருடியோ உரிமையாளர் -
(89950)



லிங்கம் சில்க் ஹவுஸின்
மாபெரும் ஆடி மாத சிறப்புத் தள்ளுபடி

ஆடி மாதம் 2ஆம் திகதி முதல் மாபெரும் சிறப்புத் தள்ளுபடியில் விற்பனை நடைபெறுகின்றது. விரையுங்கள்! முந்துங்கள்!!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பனாறிஸ் | 4500 | 3900 | பிளேன் சாறி | 400 | 300 |
| காஞ்சிபுரம் (பியோர்) | 2750 | 2000 | சேட்வகைகள் (Box) | 700 | 500 |
| காஞ்சிபுரம் (பியோர்) | 2000 | 1500 | சேட்வகைகள் (Box) | 550 | 400 |
| மைசூர் சில்க் | 2250 | 1750 | Tசேட் வகைகள் | 400 | 300 |
| றிச்கொட்டின் சாறி | 2150 | 1800 | பேபிசூட் வகைகள் | 425 | 300 |
| றிச்கொட்டின் சாறி | 1800 | 1400 | பேபிசூட் வகைகள் | 300 | 200 |
| றிச்கொட்டின் சாறி | 1400 | 1000 | சற்றின் பிளேன் | 140 | 100 |
| பிரியங்கா கொட்டின் சாறி | 1100 | 850 | சில்க் பொலியஸ்ரர் | 70 | 50 |
| நோமல் சாறி (with Blows) | 900 | 600 | பலஸ் | 120 | 90 |
| நோமல் சாறி | 600 | 400 | சொட்ஸ் சில்க்ஸ் | 160 | 100 |
| நோமல் சாறி | 450 | 200 | சலஞ்சர் (44") | 90 | 60 |
| பஞ்சாபி வகைகள் | 1600 | 1200 | சலஞ்சர் (36") | 80 | 50 |
| பஞ்சாபி வகைகள் | 1200 | 800 | றங்குலர் (கறுப்புவெள்ளை) | 40 | 30 |
| பிளேன் சாறி | 425 | 350 | குஷ்பு செற் (L) | 1100 | 850 |
| சூட்டிங் | 350 | 200 | (M) | 750 | 600 |
| | | | (S) | 600 | 450 |

| | | |
|---|---|---|
| பஞ்சாபி | 1400 | 1100 |
| | 1100 | 800 |
| | 700 | 490 |

ஏனையவற்றை 20% தள்ளுபடியில் பெற்றுக்கொள்ளலாம்.
18, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (C/17350)



15-07-2001
சுடர் ஒளி

✤ கறுப்பு ஜுலையில் அரசு கவிழ்ப்பு! ஜனாதிபதியும் பதவி நீக்கமா?
✤ பெண்களின் மானம் காக்கும் பணியில் இதோ மக்கள் அணி!
✤ ஜெயலலிதா ஏவிவிட்ட பூதம் அவரையே விழுங்க வருகிறது..!
✤ வடக்கில் பொலிஸ் உதவியாளர்களா, சட்டபூர்வ ஆயுதக் குழுக்களா?
✤ இலங்கைத் தமிழர் அரசியலில் தடம்புரண்ட தலைவர்கள்!
✤ மரபுவழிப் போராட்டத்தில் புலிகளின் பெருவளர்ச்சி
✤ ஆஞ்சநேயர் வழிபாடு: லண்டன் மெய்கண்டார் ஆதீனகுரு கடிதத்துக்கு கம்பன் கழகம் பதில்
✤ பெற்ற பிள்ளைகள் வெளிநாடுகளில் முதியவர்கள் அவதி குடாநாட்டில்!

சினிமா, சிறுவர், பெண்கள், விளையாட்டு, மருத்துவ ஆலோசனைப் பகுதிகள், சிறுகதை, தொடர்கதை, 'க்ரைம்' டயறி (C/17372)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.